**காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு - 2022**

-------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் - 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையில் நான் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வினை ேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லைகள் (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க செயற்படுத்தப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைய பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

**1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தினால் பொருண்மையான முன்னைய காலப்பகுதிக்கான பிழைகள் கடந்த காலத்திற்கு பொருத்தமாக சரிசெய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செம்மையாக்கப்படாது மீளாய்வாண்டிற்கான கருங்கல் குத்தகை வருமானம் ரூபா 69,742,587 மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. | கருங்கல் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையில் ஒரு குத்தகைப் பேரேடு பேணப்படாமையால் கிடைக்க வேண்டிய வருமானத்தை உறுதியாக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க முடியாதிருந்தது. செயற்திட்ட பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகத்தின் தகவல்கள் நிதிக்கூற்றுக்களுக்கு மற்றும் கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கும் போது அவற்றின் வித்தியாசத்தினால் கணக்காய்வு ஐயவினா மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது கவனம் செலுத்தப்பட்டது. மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியில் சுட்டிக்காட்டப்பட்ட குத்தகைப் பேரேட்டினைத் தயாரிப்பதற்கு முடியாத குத்தகைதாரருக்குரிய அவரின் ஆரம்ப மீதியே கணக்குகளில் சுட்டிக்காட்டப்பட | இலங்கை பொபதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முன்னைய காலப்பகுதியின் பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டிய போதிலும் அம்மீதிகளை கருத்தில் கொள்ளாது முழுத்தொகையையும் நீக்குவதன் மூலம் கருங்கல் குத்தகை வருமானம் மறைப்பெறுமதியைக் காட்டியுள்ளது. தற்பொழுது குத்தகைப் பேரேடு தயாரித்து முடிவடைந்துள்ளதனால் அத்தகவல்கள் 2023-12-31 ஆந் திகதியில் உள்ளவாறான இறுதிக் கணக்கறிக்கையில் செம்மையாக்கலின் அடிப்படையில் இத்தவறினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் அட்டுறு அடிப்படைக்கு இணங்க கொடுக்கல் வாங்கல்கள் ஏனைய சம்பவங்கள் மற்றும் நிலைமைகளை அவை இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்திலேயே இனங்காணும் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டு தொடர்பாக இந்த ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட எரிபொருட்கள் மற்றும் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தமாக ரூபா 5,600,567 தொகை மீளாய்வாண்டிற்கான செலவாக இனங்காணப்பட்டதனால் அப்பெறுமதியால் உரிய செலவுகள் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செலவுகளை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கடந்த கால கிரயத்தின் மூலம் எதிர்கால பொருளாதார நலன்களில் நேரடியாக அதிகரிப்புச் செய்யுமாகவிருந்தால் மாத்திரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியை அதிகரிப்பாக இனங்காணுமாறு காட்டப்பட்டிருந்தும் அவ்வாறான செலவாக கருதமுடியாத ரூபா 634,441 தொகையான கட்டிட திருத்தச் செலவுகள் 2022 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களின் மீதிக்கு உள்ளடக்கப்பட்டு அதற்கான பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடாக ரூபா 36,662 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது 754,400 பெறுமதிக்கு மொனராகலை மாவட்ட அலுவலககட்டிடம் திருத்தம் செய்யப்பட்டது. அதற்கிணங்க கட்டிடத்தின் பெறுமதி அதிகரிக்கப்பட்டதனால் நிலையான சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்பட்டு ஆண்டின் இறுதியில் பெறுமானத் தேய்விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கட்டிடங்களை திருத்தம் செய்யும் செலவு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இற்கு இணங்க பௌதீக ரீதியாக காணப்படாத நிதியற்ற சொத்துக்கள் கட்புலனாகாத சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டியதுடன் அதன் வினைத்திறனான ஆயுட்காலம் முழுவதும் காலக்கழிவு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 10,120,040 கிரயமான மென்பொருள் முறைமையினை கட்புலனாகாத சொத்துக்களாக இனங்காண்பதற்குப் பதிலாக நிதி நிலைமைக் கூற்றில் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்குள் உள்ளடக்கப்பட்டு அதற்கான காலக்கழிவிற்காக ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 2,024,080 தொகை பெறுமானத் தேய்விற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிக் கோவைக்கு இணங்க ஆணைக்குழுவினால் நிலையான சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கிணங்க கட்புலனாகாத சொத்துக்கள் தொகுதியைச் சார்ந்த கணனி மென்பொருள் என்ற பெயரிலான பகுதி மனைப் பொருள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழ் தனியான ஒரு உப பகுதியாக எங்களால் பேணப்பட்டு வருகின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட’டு நியமங்களுகு இணங்க பௌதீகரீதியாக காணப்படாத நிதியற்ற சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது என நிதிக்கூற்றுக்களின் 1.6.2 ஆம் இலக்க கணக்கீட்டு கொள்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் முதலீட்டு வருமானங்கள், காணிக் குத்தகை வருமானம் மற்றும் அவை மீது அறவிடப்படுகின்ற மிகைக்கட்டணம், கருங்கல் குத்தகை வருமானம், காணிகளைச் சுவீகரித்தல் மற்றும் காணி விற்பனை வருமானங்களைத் தவிர்த்து தேங்காய் வருமானம், கனியவளங்கள் வருமானம்,, பதிவுசெய்தல் வருமானம் போன்ற 16 வகையான வருமானங்கள் தொடர்பாக மொத்தமாக ரூபா 27,057,727 தொகையான வருமானங்கள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 15 இன் கீழ் சுட்டிக்காட்டப்படுகின்ற ஏனைய செயற்பாட்டு வருமானங்களின் கீழ் நிருவாகக் கட்டணங்கள், விண்ணப்பக் கட்டணங்கள் தேங்காய் வருமானங்கள், ஆணைக் குழு கட்டணங்கள், பயிர்ச் செய்கை வருமானம், கடிதங்களை வழங்குதல் வருமானம், போட்டோ பிரதி பண்ணல் கட்டணம், செயற்திட்ட கட்டணம், காணிக்குத்தகை மிகை அறவீடு, காணி விற்பனை இறைவரி, வழங்குனர்களைப் பதிவு செய்தல், இறால் வருமானம், அளவீட்டு கண்காணிப்பு கட்டணம், மணல் வருமானம், மரபுரிமை வருமானம் என்பன உள்ளடக்கப்படுகின்றன. இந்த வருமானங்களை உறுதியாக இனங்காணமுடியாததனால் அட்டுறு அடிப்படையில் கணக்குவைப்பதற்கு இயலுமை இல்லை. மேலும் விண்ணப்பக் கட்டணம், கடிதங்களை வழங்குதல், போட்டோ பிரதி பண்ணுதல், வழங்குனர்களைப் பதிவுசெய்தல், மர வருமானம் என்பன மூன்றாம் தரப்பினர்களால் மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு கிடைக்கின்ற வருமானம் என்பதனால் அவற்றினை ஏற்கனவே இனங்காணமுடியாது. அதிகாரமற்று காணிகளைப் பயன்படுத்துபவர்களிடமிரு | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

ந்து அனுமதியின்றி பயன்படுத்துதல் கட்டணமும் மாற்றல் உறுதியின் மூலம் வெளியாருக்கு வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அறவிடப்படுகின்றது. இப்பணமானது உறுதியினை வழங்கும் வரை அறவிடப்படுகின்ற கட்டணம் என்பதனாலும் அதிகாரமின்றி பிடிப்பதற்கு சட்டரீதியாக்குதல் என்பதனாலும் இது நிச்சயமாக எதிர்காலத்திற்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்பது தொடர்பாக முன்னறிந்து கணக்குகளில் செம்மையாக்குதல் சட்டரீதியற்றது என தெரிவிக்கிறேன்.

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பெறவேண்டிய கருங்கல் குத்தகை வருமானத்தில் ரூபா 86,586,842 தொகை கருங்கல் குத்தகை வருமானக் கணக்கிற்கு வரவுவைத்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செய்வதற்கான காரணம் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதிக்குரிய கருங்கல் குத்தகைதாரர்கள் உறுதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2022-12-31 இல் உள்ளவாறு 21 குத்தகைப் பேரேட்டின் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் 17 குத்தகைதாரர்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய பணம் ரூபா 80,756,451 இறுதிக் கணக்குகளுக்கு செம்மையாக்கப்பட்டுள்ளது. | குத்தகைதாரர்களை உறுதியாக இனங்கண்டு குத்தகை வாடகை வருமானத்தினை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 1972 ஆம் ஆண்டில் ஆணைக்குழு தோற்றுவிக்கப்பட்ட திகதியிலிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக காணிகளின் ஏக்கர் அளவு, ஒவ்வொரு காணியும் அமைந்துள்ள பிரதேசம், சுவீகரிக்கப்பட்டது எவரிடமிருந்து, தற்பொழுது பயன்படுத்துவதற்கு ஒப்படைத்தல் என்பன | முறைப்படியாக மற்றும் காலத்திற்குப் பொருத்தமாக நாளதுவரையாக்கிய காணிப் பதிவேடு ஆணைக்குழுவிடம் இல்லை. நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதாவது 1975 ஆம் ஆண்டிற்கான காணிப் பெறுமதியான ரூபா 890,959,772 தொகையாகும். | சுவீகரித்த காணிகளின் பதிவேட்டினை பராமரித்து நாளதுவரையாக்கிய பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

தொடர்பாக விபரமும் உரிய வர்த்தமானி அறிவித்தலும் மற்றும் காணிகளை வழங்குவதற்குரிய அனைத்து விபரங்களும் என்பன தொடர்பான முழுமையான தகவல்களை உள்ளடக்கிய ஒரு பதிவேடு நிறுவனத்தினால் பேணப்பட்டிருக்காததுடன் அது தொடர்பான துணை ஆவணங்களின் மூலம் தெளிவுபடுத்துவதற்கும் நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 676,169,345 தொகையான பொறுப்பேற்கப்பட்ட காணிகளின் உள்ளமை மற்றும் மதிப்பீடு செய்தலின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிடம் 424,809 ஏக்கர்கள் காணப்படுகின்றது என 2023 ஏப்பரல் 26 ஆந் திகதி நடைபெற்ற பொதுமுயற்சிகள் தொடர்பான குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு ஏக்கர் காணியின் பெறுமதி ரூபா 1,591 எனும் அளவிற்கு மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

பின்னைய ஆண்டுகளில் இடம்பெற்ற காணிகளை வழங்குதல்களின் பின்னர் 2006 ஆம் ஆண்டின் போது காணிகளின் பெறுமதி ரூபா 676,169,346 ஆக இருந்ததுடன் இன்றுவரை அப்பெறுமதி மாற்றமின்றிக் காணப்பட்டது. இச்சிக்கலினைத் தீர்த்துவைப்பதற்கு நாளதுவரையான காணிப்பதிவேடு 04 கட்டங்களின் கீழ் தயாரிக்கும் நடவடிக்கை அமுல்ப்படுத்துப்பட்டுள்ளது. அதாவது

(i) வெளியிடப்பட்ட அனைத்து காணிகளையும் மாவட்ட மட்டத்தில் கணனிமயப்படுத்துதல்

(ii) வெளியிடப்பட்ட காணிகளில் அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டரீதியான கடப்பாடாக விடுவிக்கப்பட்ட காணிகளை காணிப்பதிவேட்டில் நீக்கி ஆணைக்குழுவின் காணிகளின் அளவை இனங்காணுதல்.

(iii) ஆணைக்குழு பல்வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கிய காணிகளை நீக்குதல்

(iv) ஆணைக்குழுவின் காணி அமைவிடத்தை இனங்காணல், அளவீடு செய்தல் மற்றும் மீள்மதிப்புச் செய்தல்

இந்த 04 கட்டங்களில் தொடக்க 02 கட்டங்களின் நடவடிக்கைகள் முடிவவடைந்துள்ளதுடன் 03 ஆவது கட்டத்தின் நடவடிக்கையை மூன்று

| | | | |
|---|---|---|---|
| | | வாரங்களுக்குள் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (இ) | 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தோட்ட கம்பனிகளிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் பொறுப்பேற்ற காணிகளுக்காக செலுத்த வேண்டிய இழப்பீடு தொங்கல் (கட்டம் - I மற்றும் II) கணக்கில் காணப்பட்ட மொத்தமாக ரூபா 215,745,462 தொகையான மீதி மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்த்துவைக்கப்பட்டிருக்காததுடன் பொறுப்பின் தன்மை தொடர்பான பொழிப்பாக்கிய விபரம் கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | ஆணைக்குழு அதிகார சட்டத்தின் பிரகாரம் தோட்ட கம்பனிகளிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் பொறுப்பேற்ற காணிகளுக்காக செலுத்த வேண்டிய இழப்பீடு நிர்ணயிக்கப்படாத கட்டம் 01 மற்றும் 02 இற்காக காணப்படுகின்ற மீதியை தீர்த்துவைக்காமைக்கு தாக்கமளிக்கும் பிரதான காரணமாவது வெளியிடுபவர்களின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ளல், சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்காமை, சட்டரீதியான கடப்பாடுகளின் கீழ் வெளியிடுபவர்களுக்கு காணிகளை விடுவிக்க வேண்டியிருந்தமை, வெளியிடப்பட்ட காணிகள் சம்பந்தமான நீதிமன்ற நடைமுறை, இழப்பீடு வழங்கும் கடிதம் வழங்கப்பட்டதன் பின்னர் அப்பணம் போதியதாக இல்லாமையின் காரணமாக பெற்றுக்கொள்ளல் மறுக்கப்படுதல் மற்றும் காணிகளை சுவீகரிக்கும் மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீட்டினைச் சமர்ப்பித்தல் மற்றும் நியதிச்சட்ட இழப்பீட்டு பணம் வழங்கியதன் காரணமாக அது போதியதாக இல்லாமையின் காரணமாக இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வராமை முதலிய விடயங்களினாலாகும். | தொங்கல் கணக்கு மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 5.3 இன் மூலம் 17 | நிதிக்கூற்று கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறான குத்தகைப் பேரேடானது 93 | குத்தகைப் பேரேட்டினை சரி செய்வதனை |

| | | | |
|---|---|---|---|
| | கருங்கல் காணி குத்தகைதாரர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை வருமானம் ரூபா 80,756,451 ஆக இனங்காணப்பட்டிருந்தும் 2023 மே 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பித்த குத்தகை பேரேட்டின் பிரகாரம் 93 கருங்கல் குத்தகைதாரர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 293,891,542 கிடைக்கவேண்டும் என பின்னர் இனங்காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க கிடைக்க வேண்டிய ரூபா 213,135,091 தொகையான கருங்கல் குத்தகை வருமானமானது நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | குத்தகைதாரர்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து முடிவுறுத்த வேண்டிய 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த 17 குத்தகைதாரர்கள் தொடர்பான தகவல்கள் செம்மையாக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2023-12-31 இல் உள்ளவாறு அனைத்து குத்தகைதாரர்கள் தொடர்பான தகவல்களை நிதி அறிக்கைகளில் செம்மையாக்குதல் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கிறேன். | துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) | ஆணைக்குழுவின் காணிகளில் சபை அமைந்துள்ள மொனாராகலை, இரத்தினபுரி மற்றும் புத்தளம் மாவட்டங்களின் அலுவலகக் கட்டிடங்களின் கிரயம் முறையே ரூபா 1,350,000, ரூபா 7,000,000 மற்றும் ரூபா 5,700,000 ஆன போதிலும் அக்கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மொனராகலை, இரத்தினபுரி, புத்தளம் ஆகிய மாவட்டங்களின் காணிகளில் சபை அமைக்கப்பட்டுள்ள காணிகளை நில அளவை செய்து தற்பொழுது திட்ட வரைபட பிரதி தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த திட்ட வரைபட பிரதியானது அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை சரிசெய்தல் துரிதமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஊ) | ஹிக்கடுவ பிரதேச செயலகப் பிரிவில் ஹதனகொட தோட்டத்தின் 4290 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டு தொடர்பாக 0.4443 ஹெக்டயரினை சுனாமி வீடமைப்புத் திட்டத்திற்கு வழங்கியமைக்காக ஹிக்கடுவ பிரதேச செயலாளரிடமிருந்து | ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டுப் பணம் ரூபா 5,300,000 ஆனது இரத்கம பிரதேச செயலாளரினால் 2023-02-03 ஆந் திகதி செலுத்தப்பட்டுள்ளது. பெறுமதியானது சுவீகரிப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினால் பிழையாக ரூபா | வருமானங்கள் மற்றும் கடன்பட்டோர்கள் சரிசெய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்க வேண்டிய இழப்பீட்டுப் பணம் ரூபா 5,300,000 ஆக இருந்த போதிலும் தவறுதலாக ரூபா 53,000,000 ஆக கணக்கீடு செய்ததனால் மீளாய்வாண்டிற்கான வருமானமும் கடன்பட்டோரும் ரூபா 47,700,000 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 53,000,000 கிடைக்க வேண்டிய வருமானமாக காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 47,700,000 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனை அடுத்துவரும் நிதி ஆண்டில் சரிசெய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (எ) | நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவின் லிதுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 2736 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 01 , 02 மற்றும் 03 ஆம் இலக்க காணித் துண்டுகளை லிதுவ பொலிஸ் நிலையத்திற்காக சுவீகரிப்பது தொடர்பாக ரூபா 4,016,000 இழப்பீட்டுப் பணம் 2022 ஒக்தோபர் மாதம் 17 ஆந் திகதி கிடைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீண்டும் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானமும் கடன்பட்டோரும் அப்பெறுமதியால் அதிகரித்து காட்டப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | சுவீகரிப்பதற்கான இழப்பீட்டுப் பணம் 2022-10-17 ஆந் திகதி ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளது. அதனை மீண்டும் சுவீகரிப்பு பிரிவின் மூலம் பெறவேண்டிய பணம் பதிவு செய்தமையின் காரணமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை அடுத்துவரும் நிதியாண்டில் சரிசெய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வருமானமும் கடன்பட்டோரும் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 10 இன் குறிக்கோளாவது பெறுமதியை பரிமாற்றம் செய்யும் கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவத்திலிருந்து உருவாகின்ற இறைவரியினை இனங்காண்பதாக உள்ளதுடன் அதற்கிணங்க எதிர்கால பிரதிபலன்கள் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு உட்பாய்யச்சப்படுவது நிர்ணயிக்கப்படுகையில் மற்றும் அந்த பிரதிபலனை நம்பகமாக அளவீடு செய்யக்கூடியதாக இருக்கையிலாகும். அதற்கிண்ஙக காலி மாவட்டத்தின் இமதுவ பிரதேச செயலகப் பிரிவில் தீகொட மேலதிக கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மொரகொல்ல | ஆணைக்குழு 21 ஏக்கர் 01 ரூட் 10 பேச்சர்ஸ் காணியினை கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. அக்காணியினை சுவீகரிப்பதற்கு செலவாகின்ற ரூபா 75,000,000 பணத்தினை செலுத்துவதற்கு 2017-12-19 ஆந் திகதி பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த இழப்பீட்டுப் பணம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டிலிருந்து இச்சுவீகரிப்பினை மேற்கொள்வதற்கு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் எதிர்கால பொருளாதார பிரதிபலன்கள் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படுவது நிச்சயமாகுகையில் மற்றும் அந்த பிரதிபலன்களை நம்பகமாக அளவீடு செய்யக்கூடியதாக இருக்கையில் இறை வரியினை இனங்காணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தோட்டத்தின் ஹல்கஸ்முல்ல கந்த எனும் பெயரிலான 21 ஏக்கர் 01 ரூட் 10 பேச்சர்ஸ் காணியினை கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒரு களஞ்சியத்தினை நிர்மாணிப்பதற்காக ஆணைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் இமதுவ பிரதேச செயலகத்தினால் 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழான தீர்மானம் பிரதேச செயலகத்திடமிருந்து கிடைக்கையில் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய இழப்பீட்டுப் பணத்தை பெற்றுக்கொள்ளும் இயலுமையினை உறுதியாக இனங்காணக்கூடியதாக இருந்த போதிலும் அத்தீர்மானம் கிடைக்காதிருந்தும் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சு செயலாளரின் கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு காணியின் இழப்பீட்டுப் பணம் ரூபா 75,000,000 மீளாய்வாண்டிற்கான வலருமானமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே காணியின் நிர்மாண நடவடிக்கையை மேற்கொள்வதற்குரிய அனுமதி 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டளவில் 04 ஆண்டுகள் கடந்திருந்தும் பிரச்சினை உருவாகியிருந்ததனால் ஒப்படைக்கும் நடவடிக்கையினைப் பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படாததனால் இது தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு தொலைபேசியின் மூலம் தகவல்களை விசாரித்த போது மேற்கூறிய சுவீகரிப்பிற்குரியதான 8.6250 ஹெக்டயர் அளவினை வழங்குவது தொடர்பாக தோட்ட முகாமைத்துவத்தினால் எதிர்ப்பு முன்வைக்கப்பட்டுள்ளது என 4.3/2/2018/VI/32 ஆம் இலக்க 2020-06-12 ஆந் தகிதிய கடிதத்தின் மூலம் இன்னுமொருவருக்கான பிரதியுடன் செலாளர், திறன் அபிவிருத்தி வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சிற்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (காணி சுவீகரிப்பு) இனால் ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது என எங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிண்ஙக இக்காணிச் சுவீகரிப்பு இன்னும் அமுல்ப்படுத்தப்படுகின்றதா என்பதனை இமுதுவ பிரதேச செயலாளரிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பதில் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஐ) | குருனாகல் மாவட்டத்தில் கார்ட்லன்ட் தோட்டம் எனும் பெயரிலான காணிக்குரிய 12820 ஆம் இலக்க திட்ட | 2022-12-31 இல் உள்ளவாறு இந்த ஒப்படைப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் | மிளாய்வாண்டிற்கான வருமானத்தினையும் கடன்பட்டோரினையு ம் இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித் துண்டில் காட்டப்படுகின்ற 256 ஏக்கர் 01 ரூட் 22 பேச்சர்ஸ் மற்றும் ஹாவானிலாவத்த எனும் பெயலிலான காணிக்குரிய 12821 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 01 ஆம் மற்றும் 02 ஆம் இலக்க காணித்துண்டில் காட்டப்படுகின்ற 118 ஏக்கர் 38 பேச்சஸ் அளவான இரண்டு காணிகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 22(1)(ஆ) பிரிவின் பிரகாரம் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2021 மே 05 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அறவிடப்பட வேண்டிய வருடாந்த குத்தகை 2022-10-13 மற்றும் 2022-11-18 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான குத்தகை வாடகை முறையே ரூபா 12,800,000 மற்றும் ரூபா 6,720,000 ஆக மொத்தமாக ரூபா 19,520,000 தொகையினை காணிக் குத்தகை வருமானமாக இனங்காணப்படாததனால் 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமானம் மற்றும் கடன்பட்டோர் குறைத்துக் காட்டப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | செம்மையாக்குவதற்கு முடியாதுள்ளது. தற்பொழுது பேரேட்டினைத் தயாரித்து குத்தகைதாரருக்கு தெரிவித்து அதற்கிணங்க அடுத்துவரும் நிதி ஆண்டின் போது இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.<br><br>ஹாவானிலவத்த எனும் பெயரிலான காணி தொடர்பாக வருமானப் பிரிவின் மூலம் உரிய கோவை தயாரிக்கப்பட்டு பேரேட்டில் உள்ளடக்குவதற்கு ஏற்பட்ட தாமதத்தின் அடிப்டையில் இது கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது பேரேடு தயாரிக்கப்பட்டு குத்தகைதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஒ) | அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஊரணிக்கு காணியின் 08 ஏக்கர் 01 ரூட் 11.48 பேச்சஸ் சுற்றுலா ஹோட்டல் செயற்திட்டத்திற்காக ஒரு தனியார் கம்பனியால் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அக்காணிக்கான வருடாந்த குத்தகைப் பணமானது 05 ஆண்டுகளுக்குமான முழுக் | அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஊரணிக்காடு காணியில் 08 ஏக்கர் 01 ரூட் 11.48 பேச்சர்ஸ் அளவிலான காணியினை ஹோட்டல் செயற்திட்டத்திற்காக அப்ரோடா மற்றும் பப்ரா தனியார் கம்பனிக்கு 2019-01-01 ஆந் திகதியிலிருந்து குத்தகை அடிப்படையில் | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகை வருமானம் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது கிடைத்து அந்த ஆண்டுகளின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் 2022 ஆம் ஆண்டிற்கான காணிக்குத்தகை வருமானம் ரூபா 748,800 தொகை மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 748,800 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டிருந்தது. 2019-01-01 - 2023-12-31 வரையான தொடக்க 05 ஆண்டுகளுக்கான குத்தகைப் பணம் 2018-07-30 மற்றும் 2020-08-25 ஆந் தகிதிகளில் செலுத்தப்பட்டிருந்தது. இக்குத்தகையை அறவீடு செய்வது தொடர்பான பற்றுச்சீட்டு அம்பாறை மாவட்ட அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. பற்றுச்சீட்டினை வழங்கி 02 ஆண்டுகள் கடந்திருந்ததனால் அது திருத்தம் செய்யப்படாததுடன் 2023 ஆம் ஆண்டிற்குரிய குத்தகையை செம்மையாக்கும் போது நாட்குறிப்பின் மூலம் ரூபா 748,800.00 குத்தகைப் பணத்தை செம்மையாக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | |
| (ஓ) | ஆணைக்குழவினால் குத்தகைக்கு வழங்கும் போது காணிக் குத்தகைப் பணத்தை மதிப்பீடு செய்வதற்காக குத்தகைதாரரிடமிருந்து அறவிடப்படுகின்ற சேவைக் கட்டமானது உரிய காணி மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டின் ஒரு வருமானமாக இனங்காணப்படாது அப்பணம் கிடைக்கின்ற ஆண்டின் போது காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட காணிக் குத்தகை பேரேட்டிற்கு இணங்க கிடைக்க வேண்டிய குத்தகை சேவை கட்டணமான ரூபா 3,890,125 தொகையினை கிடைக்க வேண்டிய வருமானமாக இனங்காணப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் கடன்பட்டோர் அப்பெறுமதியால் குறைத்து காட்டப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | 2021-12-31 வரை குத்தகைதாரரின் குத்தகை திகதியை அடிப்படையாகக் கொண்டு குத்தகைப் பேரேட்டில் மதிப்பீடும் சேவைக்கட்டணமும் குத்தகைப் பணம் தொடர்பாக கிடைக்க வேண்டுமென பேரேட்டில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுப் பிரிவின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணக்காய்வாண்டிற்குரிய காலத்தின் அடிப்படையில் மற்றும் குத்தகை, மிகைக் கட்டணம் மதிப்பீடும் சேவைக்கட்டணமும் என்பன தனித்தனியாக உள்ளடக்கப்பட்டு சரியாக பேரேடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க எதிர்காலத்தில் இதனை சரிசெய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | கணக்கு காலப் பகுதியின் அடிப்படையில் குத்தகை மிகைக் கட்டணம், மதிப்பீடு மற்றும் சேவைக் கட்டணம் தனித்தனியாக சமரப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆவணங்களுக்கு இணங்க தற்பொழுது ரூபா 418,475.00 தொகைக்குரிய மதிப்பீடும் சேவைக் கட்டணமும் அறவிடப்பட்டுள்ளது. | |
| (ஔ) | 2005 யூலை 06 ஆந் திகதிய 2005/07 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் காணியை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்க வேண்டிய குத்தகைப் பணம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அறவிடப்படவில்லையாயின் பணம் அறவிடப்பட்ட திகதி வரையான காலத்தை கணக்குப் பார்த்து 10 சதவீத தண்டப்பணம் குத்தகைதாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் 31 குத்தகை காணிகளுக்காக அவ்வாறு கிடைக்க வேண்டிய தண்டப்பணமான ரூபா 21,064,409 தொகை மீளாய்வாண்டின் போதும் கிடைக்க வேண்டிய வருமானமாக இனங்காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.<br>அதற்கிணங்க மீளாய்வாண்டின் வருமானமும் கடன்பட்டோரும் அத்தொகையால் குறைத்துக் காட்டப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | 31 குத்தகைதாரர்களுக்கு உரிய நிலுவை குத்தகைப் பணத்திற்கு மிகைக் கட்டணத்தை செம்மையாக்குவதற்கு பின்வரும் விடயங்கள் தாக்கமளித்துள்ளது.<br>• காணிகளை குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கும் போது குத்தகைகளை செலுத்துமாறு குத்தகைதார்களுக்கு தெரிவித்து பேரேட்டு கணக்குகளுக்கான நிலுவை குத்தகைப் பணம் செம்மையாக்கப்பட்டிருந்தும் பணம் செலுத்தப்படாததனால் பயன்படுத்துவதற்கான அனுமதி ஒப்படைப்பட்டிருக்கவில்லை.<br>• நிலுவைக் குத்தகைப் பணத்தை தவணை ரீதியாக அறவிடப்படுகின்ற குத்தகைதாரர்கள் உள்ளமை.<br>• சட்டரீதியான நடவடிக்கைகளின் மூலம் அது தொடர்பான நிலுவை குத்தகைப் பணத்தினை அறவீடு செய்வதற்குரிய குத்தகைதாரர்கள் உள்ளமை.<br>• நீணடகாலமாக விகாரையினால் பயன்படுத்தி வருகின்ற காணியை விற்பனை செய்து ஒப்படைத்தல் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் | கிடைக்க வேண்டிய வருமானத்தை அஇனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்துதல்<br>• தொடக்க குத்தகை அறிவித்தல் கடிதத்தினை குத்தகைதாரருக்கு 2022-12-31 ஆந் திகதியின் பின்னர் அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை.<br>• 15 நாட்களுக்கு குறைந்த காலம் தாமதமடைந்திருந்த குத்தகைதாரர்களிடமிருந்து மிகைக்கட்டணம் அறவிடப்படாமை.<br>• காணி முழுவதையும் அல்லது ஒரு பகுதியினை அரசாங்கத்தின் மூலம் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை.<br>• காணிக்குரிய மதிப்பீடு மற்றும் குத்தகைப் பணம் ஆகிய இரண்டும் 2022 ஆம் ஆண்டு தொடர்பாக இடம்பெற்றிருந்தமை.<br><br>மேற்கூறிய விடயங்கள் தொடர்பான குத்தகை கோவைகள் சம்பந்தமான மிகை அறவீட்டுச் செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மிகை அறவீடு செம்மையாக்கப்பட வேண்டிய கோவைகள் தொடர்பாக தற்பொழுது பேரேட்டுக் கணக்குகளுக்கு செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு குத்தகைதாரர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (க) | ஆணைக்குழுவின் அடுத்துவரும் காலங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை வாடகைகளைப் பரீட்சித்த போது 12 குத்தகைதாரர்கள் தொடர்பான ரூபா 7,840,369 வருடாந்த குத்தகை வருமானம் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டதனால் ஆண்டிற்கான குத்தகை | குத்தகை பிரிவின் மூலம் குத்தகைதாரர்கள் தொடர்பான ஆரம்ப மீதி, ஆண்டின் போது கிடைத்த தொகை, 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பணம், அடுத்துவரும் காலத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட | குத்தகை வருமானம் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யும் பிழையினை சரி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் அத்தொகையால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பணம் என்பன தொடர்பாக நிதிப்பிரிவின் ஆவணங்களின் அடிப்படையில் இறுதிக்கணக்கறிக்கைக்குள் செம்மையாக்கல்கள் செய்யப்பட்டன. அடுத்துவரும் காலங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகைப் பதிவேட்டில் 2022-01-01 இல் உள்ளவாறான மீதிகளில் நடைமுறை ஆண்டு தொடர்பான குத்தகைப் பணம் கணிக்கப்பட்டு குத்தகை வருமானத்திற்கு செம்மையாக்குதலானது நிதிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிண்ங்க இந்த 12 குத்தகைதார்ர்கள் தொடர்பான குத்தகை வருமானம் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதிப்பிரிவிற்ம் ஏனைய பிரிவுகளுக்குமிடையே முறையான ஒருங்கிணைப்பு இல்லாமையானது அடுத்துவரும் காலங்களில் இடம்பெறாத வகையில் உரிய பிரிவுகளுக்கிடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவதற்கு பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (கா) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் மதிப்பீட்டுக் கட்டண முற்பணம் ரூபா 48,330,211 மீதியினுள் மீளாய்வாண்டின் போது தெல்கொல்லவத்த காணி தொடர்பாக கிடைத்த பணம் ரூபா 425,000 மற்றும் குருனாகல் பன்லியத்த தோட்டத்தின் 15 ஏக்கர்களை குருகம்மானவிற்கு தெரிவுசெய்யப்பட்ட நபர்களுக்கு விற்பனை செய்து ஒப்படைப்பதற்காக | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்களும் வருமானங்களும் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் ரூபா 4,873,000 ஆக மொத்தமாக ரூபா 5,298,000 பெறுமதி வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை ல. அப்பெறுமதி ஒரு பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக வருமானம் அப்பெறுமதியால் குறைத்தும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் அதிகரித்தும் காட்டப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (கி) | 2022 திசெம்பர் 27 ஆந் திகதி ஆணைக்குழுவினால் இலங்கை வங்கியில் மீள்கொள்வனவு (REPO) வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 40,000,000 தொகை 18 சதவீதமான வட்டி வீதத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டு 2023 சனவரி 23 ஆந் திகதி முதிர்ச்சியடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டில் 04 நாட்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 79,121 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 454,945 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் அந்த வருமானம் ரூபா 375,824 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கான நடவடிக்கை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்தினை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கீ) | குருனாகல் மாவட்டத்தில் ரஸ்னாயகபுர பிரதேச செயலகப் பிரிவில் 272 ஆம் இலக்க கடிகாவயாய 03 கிராம உத்தியோகத்தர் பிரிவில் பொலந்தலாவ கிராமத்தில் அமைந்துள்ள காணியின் 2396 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 320, 323, 324, 325, 327, 332 ஆம் இலக்க காணித் துண்டுகள் உஜேகெல - கடிகாவ பாலத்தினை நிர்மாணிப்பதற்காக காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ரஸ்னாயகபுர பிரதேச செயலாளரிடமிருந்து கிடைத்த தீர்மானத்திற்கு இணங்க ஆணைக்குழுவிற்கு கிடைக்க | இழப்பீட்டுப் பணமான ரூபா 274,400 தொகை இறுதி நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய பணமாக பதியப்படவில்லை. அதனை 2023 ஆம் ஆண்டு தொடர்பாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய வருமானத்தினை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய இழப்பீட்டுப் பணம் ரூபா 274,400 என 2021 பெப்ரவரி 17 ஆந் திகதி தெரிவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை அப்பணம் கிடைக்காததுடன் அப்பணத்தை நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய பணமாகவும் இனங்காணப்பட்டிருக்கவில்லை ல. | | |
| (கு) | 2022 மார்ச் 14 ஆந் திகதி கைதவிர்ப்புச் செய்யப்பட்ட ரூபா 452,000 கிரயம் மற்றும் ரூபா 162,979 இயலளவுப் பெறுமதியான 4 போட்டோ பிரதி இயந்திரங்களும் ஒரு ஸ்கேன் இயந்திரமும் (Scanner) 2022 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | 04 போட்டோ பிரதி இயந்திரங்களும் ஒரு ஸ்கேன் இயந்திரமும் நிதி நிலைமைக் கூற்றில் Disposal/ Auction இன் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தும் அது தவறுதலாக நிதிப் பிரிவின் மூலம் மனைப் பொருள் மற்றும் அலுவலக உபகரண தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் அப்பெறுமதி இயந்திர உபகரண தொகுதியில் உள்ளடக்க வேண்டிய பெறுமதியாகும். அப்பிழையானது 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும் எனத் தெரிவிக்கிறேன். | கைதவிர்ப்புச் செய்யப்பட்ட சொத்துக்கள் கணக்குகளிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். |
| (கூ) | களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இங்கிரிய தோட்ட காணியில் 04 ஏக்கர் 02 ரூட் இனை ஒரு தனிப்பட்டவருக்கு ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை இக்காணியில் கருங்கல் உடைத்து விற்பனை செய்வதற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அக்காலத்திற்கான அரசிறையானது புவிச்சரித்திரவியல் மீளாய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு இணங்க ரூபா | இக்காணிப் பகுதிக்குள் ஒரு வீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் அடுத்துவரும் காலங்களில் உடைப்பதற்குள்ள கியூப் அளவினைப் பெற்றுக்கொள்வதற்கு மீண்டும் நில அளவை செய்யுமாறு 2017-10-25 ஆந் திகதி பணிப்பாளர் நில அளவையினால் பணிப்பாளர் செயற்திட்டத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்கிண்ங்க இக்காணியை மீண்டும் நில அளவை செய்யும் போது முன்னர் காணப்பட்ட அளவு மாற்றமடைந்ததன் அடிப்படையில் உருவாகிய நிலைமை தொடர்பாக | பெறவேண்டிய மற்றும் நிலுவையான குத்தகைப் பணத்தை பதிவேடுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 3,921,410 ஆகும். குத்தகைதாரரினால் 2022 திசெம்பர் 01 ஆந் திகதி ரூபா 850,000 பணம் செலுத்தப்பட்டிருந்தும் செலுத்தப்படாத ரூபா 3,071,410 தொகையான நிலுவைக் குத்தகை பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2023 மே 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பித்த குத்தகை பேரேட்டிலும் இந்த பெறவேண்டிய குத்தகை வருமானம் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ந்து பார்ப்பதற்கு முறையான புலனாய்வினைச் செய்வதற்காக அரசாங்க நிருவாக அமைச்சின் புலனாய்வு உத்தியோகத்தருக்கு 2023-07-12 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 02 மாதங்களுக்குள் அந்த புலனாய்வு அறிக்கை கிடைத்ததன் பின்னர் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். செலுத்த வேண்டிய பணம் தொடர்பாக 2022-05-23 ஆந் திகதி பணிப்பாளர் செயற்திட்டத்தினாலும் 2022-06-30 ஆந் தகதி களுத்துறை மாவட்ட பணிப்பாளரினாலும் குத்தகைதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டது. இக்கோவை புலனாய்வு செய்யப்பட்டுள்ளதனால் குத்தகைப் பேரேட்டினைத் தயாரிப்பதற்காக வருமானப் பிரிவிற்கு இல்லாதிருந்ததுடன் தற்பொழுது அப்பேரேடு வருமானப் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2023-07-10 ஆந் திகதிய குத்தகையை செலுத்துமாறு குத்தகைதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (கெ) | 1972 இன் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 44 (ஓ) பிரிவில் காட்டப்படுகின்ற ஆணைக்குழுவினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர்களுக்காக ஒரு சேமலாப நிதியத்தை தோற்றுவித்தல் மற்றும் நலன்புரி பொழுது போக்கு விளையாட்டு வசதிகள் மற்றும் வீடுகள் தங்குமிடங்கள் மற்றும் ஏனைய இடவசதிகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை பிழையாக விளங்கிக்கொண்டு ஆணைக்குழுவில் 5 ஆண்டுகள் | 44 (ஓ) பிரிவின் பிரகாரம் எனக்கூறி நிகழ்காலத்தில் மாத்திரமின்றி 1982 - 1984 காலப்பகுதியின் போதும் ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு காணிகள் வழங்குதல் இடம்பெற்றிருந்ததுடன் அக்காலப்பகுதியின் போது பிரதேசத்திற்குப் பிரதேசம் காணிகளை வழங்குதல் 10 பேச்சர்ஸ் அல்லது 20 பேச்சஸ்களை மிகைக்கும் வகையிலான அளவுகளில் காணிகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது என | சட்டரீதியற்ற இக்காணி வழங்கலினை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளை மீளப்பொறுப்பேற்றல் அல்லது அவற்றின் பொறுமதியை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்ச்சியாக சேவையாற்றியுள்ள ஊழியர்களுக்கு ஒரு பேச்சர்ஸ் ரூபா 1,000 பெறுமதிக்கு 20 பேச்சர்ஸ்கள் வீதம் 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 373 உத்தியோகத்தர்களுக்கு 46 ஏக்கர் 1 ரூட் 5.64 பேச்சர்ஸ் காணி வழங்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆணைக்குழுவினால் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் எனக்கூறி தற்பொழுது வரை அமுல்ப்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டத்தின் கீழ் பல்வேறு பிரதேசங்களில் காணிகளை இனங்கண்டதன் பின்னர் ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடுகிறேன். | |
| (கே) | உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு காணி இல்லை என்பதனை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் காணிகள் மேலே (கெ) பந்தியின் அவதானிப்புக்களுக்கு இணங்க உரிய உத்தியோகத்தர்களுக்கு விற்பனை செய்து வழங்கப்பட்டிருந்தும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதானது சில உத்தியோகத்தர்களுக்கு காணிகளை வழங்கியதன் பின்னர் 03- 04 ஆண்டுகள் அளவில் கடந்ததன் பின் மீண்டும் அக்காணிகள் ஆணைக்குழுவிற்கு ஒப்படைத்து ஏனைய இடங்களிலுள்ள காணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் இடம்பெற்றிருந்ததுடன் இவ்வாறு உத்தியோகத்தர்கள் அடிக்கடி இவ்வாறு காணிகளை மாற்றிக்கொண்டுள்ளார்கள் எனவும் ஆணைக்குழுவினால் உத்தியோகத்தர்களின் வேண்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு காணிகள் மாற்றிக்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. | அடுத்துவரும் காலங்களில் எந்தவொரு ஊழியருக்கும் தமது காணிப்பகுதிக்கு உறுதியினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் உரிய காணிப்பகுதியில் அவதானிக்கப்பட்ட எந்த சிக்கல் நிலைமையும் இல்லை எனத் தெரிவித்து காணிக்குரிய உறுதியை வழங்குவதற்கு இணங்கிக் கொள்ளப்படுகின்றது என சத்தியப் பிரகடனம் வழங்கியதன் பின்னர் உறுதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மிண்டும் பரிமாற்றம் செய்யப்படுவதில்லை எனவும் அனைத்து பதவியணியினர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 2/1/145/(IV) ஆம் இலக்க 2023-05-24 ஆந் திகதிய எனது வழிகாட்டிக் கோவையின் மூலம் காணி வழங்கும் நடைமுறையினை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிழையான கூற்றினைச் சமரப்பித்து காணிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கொ) | 2005 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 5930 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு பத்திரத்திற்காக எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு இணங்க ஆணைக்குழுவினால் ஊழியர்களுக்கு காணிகளை வழங்கும் போது கணவனுக்கு அல்லது மனைவிக்கு ஒரு வீட்டினை அமைப்பதற்கு காணி இல்லை என சத்திய பிரகடனம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வினால் கேகாலை மாவட்டத்தில் வல்கொடுவ வத்த, மாத்தளை மாவட்டத்தில் வரகந்தவத்த, காலி மாவட்டத்தில் வஹலந்துவ வத்த எனும் பெயரிலான காணிகளின் மூலம் ஊழியர்களுக்கு காணிகளை வழங்குவது தொடர்பாக பேணப்பட்டு வந்த கோவைகள் பரீட்சிக்கப்பட்டிருந்தும் இவ்வாறான சத்திய பிரகடனம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில் லை. என்பது அவதானிக்கப்பட்டது. | கணவன், மனைவி ஆகிய இரண்டு பேரும் இந்த ஆணைக்குழுவில் ஊழியர்களாக சேவையாற்றுவதற்கு முடியாது என முன் நிபந்தனை விதிக்கப்படாமையும் தனிப்பட்ட வாழ்வில் கணவன் மற்றும் மனைவியாக இருந்த போதிலும் சேவையாற்றும் பொழுது அவர்கள் தனித்தனியாக இரண்டு ஊழியர்களாகக் கருதப்படுவதனாலும் என்ற விடயம் 2018-02-27 ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்டத்திற்கு விடயத்தை அறிவித்ததன் பின்னர் ஊழியர் அடிப்படையில் கணவன், மனைவி ஆகிய இருவரும் ஒரு நபராகக் கருதப்படாது இருவருக்கும் காணி வழங்குதல் அங்கீகரிக்கப்பட்டது. ஊழியர் அடிப்படையில் காணியை வழங்கும் போது தொடக்க சந்தர்ப்பத்தில் காணியை பெற்றுக்கொள்வதற்காக சத்திய பிரகடனத்தைப் பெற்றுக்கொள்ளுதல் இடம்பெற்றிருந்தும் பின்னைய காலங்களில் அவ்வாறு பெற்றுக்கொள்ளுதல் இடம்பெறவில்லை என அவதானிக்கிறேன். | இக்காணிகளின் துஸ்பிரயோகம் தொடர்பாக பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டு பொறுப்புக்கூற க்கூடிய அனைத்து நபர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கோ) | 2022 ஆம் ஆண்டில் மீதி காணப்படுகின்ற இழப்பீடு செலுத்தி முடிவுறுத்தப்படாத 25 கோவைகளின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டு 13 கோவைகள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் அதற்காக செலுத்த வேண்டிய இழப்பீடு கணிப்பிடப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ள இழப்பீட்டுப் பணத்தை செலுத்தி முடிவுறுத்தாத 25 கோவைகள் மதிப்பீடுகள் மற்றும் இழப்பீட்டுப் பிரிவின் மூலம் இனங்காணப்பட்டு அவற்றின் நடவடிக்கைகளை 2022 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கு இலக்கிடப்பட்டது. அந்த | செலுத்த வேண்டிய இழப்பீட்டு பணத்தை நிர்ணயிக்கப்பட்டவா று செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | . | கோவைகளுக்கு மத்தியில் ஆண்டின் போது 04 கோவைகளின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டு மிகுதிக் கோவைகள் சம்பந்தமாக தற்பொழுது அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து இழப்பீட்டினை நிர்ணயித்து கோரப்பட்டுள்ளது எனவும் இழப்பீட்டுப் பணத்தை செலுத்துதல் தாமதமடைந்துள்ளது எனவும் மதிப்பீடு மற்றும் இழப்பீட்டு பிரிவு பணிப்பாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (கை) | இழப்பீடு மற்றும் வட்டி செலுத்த வேண்டிய 31 நபர்களை இனங்கண்டு அவர்களில் 10 நபர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அவர்களுக்கு செலுத்த வேண்டிய பணம் சம்பந்தமாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | ஆணைக்குழுவின் காணிகளுக்காக இழப்பீடு மற்றும் வட்டிப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வெளிப்படுத்தல்களைச் சமர்ப்பிக்காத கோவைகள் 31 ஆக இனங்காணப்பட்டிருந்தது. அவற்றிற்குரிய இழப்பீட்டுப் பணத்தினை 2022 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 10 கோவைகளின் இழப்பீட்டுப் பணத்திற்காக வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டு சட்டப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மிகுதிக் கோவைகளின் செயற்பாடுகளை 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர், மதிப்பீட்டிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 2,732,617,321 பெறுமதியான பெற வேண்டிய 37 கருங்கல் குத்தகை, காணிக் குத்தகை, வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய 14 மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உறுதிப்படுத்தல் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கடன்பட்டோர் மீதிகளான காணி அமைச்சு, ஹதபிம அதிகார சபை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளான மஹவெலி அதிகார சபை, சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றிற்கு நிதிப்பிரிவின் மூலம் கடிதம் அனுப்பிவைக்கப்படடுள்ளதுடன் அதன் பிரதி தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்ட தேர்தல்கள் பிரிவு, காணி மறுசீரமைப்பு, கூட்டுறவு சங்கங்கள் அனைத்தும் கலைக்கப்பட்டுள்ளதுடன் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் காணப்பட்டிருந்தும் அக்கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு 2023-06-20 ஆந் திகதி கடிதம் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய கணக்குகளுக்கும் வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளுக்குமுரிய மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தமாக ரூபா 3,561,131,052 தொகையான வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், ஹதபிம அதிகார சபை, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை போன்ற 03 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய 30 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2,126,952,139 தொகை மற்றும் 10 ஆண்டுகளை மிகைத்த ரூபா 219,681,524 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 04 நிறுவனங்களுடன் கலந்துரையாடி சரியான தீர்வு பெற்றுக்கொள்ளப்படவில்லை. தற்பொழுது அந்த நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டியதாக காட்டப்பட்டுள்ள பெறுமதியை நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்குவதற்காக அமைச்சரவைப் பத்திரம் 2023/05/25 ஆந் திகதி சுற்றுலா மற்றும் காணி அமைச்சிற்கு ஒரு தொடக்க வரைபு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மீதிகள் தாமதமின்றி தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் நானாவித கடன்பட்டோர்களின் கீழ் காட்டப்படுகின்ற களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்கள் இரண்டிலும் அமைந்துள்ள 08 காணித்துண்டுகளை குத்தகைக்குப் பெற்ற நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,311,017 தொகை 23 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டிருந்தும் உரிய குத்தகைப் பணத்தை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை மாவட்டத்தில் பரோடேல் தோட்டத்தின் 7/1997 ஆம் இலக்க திட்டவரைபடத்தில் 07 ஆம் இலக்க காணித்துண்டு கே.ஏ வசந்த எனும் பெயருள்ளவர் பணத்தை செலுத்தி உறுதி வழங்கப்பட்டுள்ளது. பரோடேல் தோட்டத்தின் திட்ட வரைபடத்தில் எம்.டீ.எஸ் பிரியந்த என்பவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இலிம்ப தோட்டத்தில் பீ.திலகசிரி மற்றும் டீ.ஆர் ஹேமலதா கணவனும், மனைவியுமாவார்கள். உரிய பணத்தை செலுத்தியதன் பின்னர் அவர்களுக்கு உறுதி வழங்கப்பட்டுள்ளது. இலிம்ப தொட்டம்-எம்.எஸ்.டீ சேனாதீர என்பவர் தொடர்பாக எந்த | நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தகவலும் கோவையில் குறிப்பிடப்படவில்லை. மில்லேவ தோட்டம் - கே.ஏ பாலித என்பவருக்கு உரிய பணத்தை செலுத்துமாறு தெரியப்படுத்தியிருந்தும் செலுத்துவதற்கு முடியாதுள்ளது என அவதானிக்கப்பட்டது. கம்பஹா மாவட்டத்தில் கஹடகஹவத்த எனும் பெயரிலான காணியின் பீ.எல் சரத்சந்திர எனும் பெயருள்ள நபர் அப்பிரதேசத்தில் இல்லை என உரிய கிராம உத்தியோகத்தரின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பாலுவத்த காணியின் எம்.டி.மேரி பென்டா எனும் நபரின் ரூபா 112,322 தொகை அறவிடப்பட்டு உறுதி வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது பணத்தை அறவிட்டு உறுதி வழங்கப்பட்டுள்ள காணித் துண்டுகளுக்குரியவர்கள் தொடர்பாக ஆணைக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய நபர்கள் தொடர்பாக மேலே குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 11,362,992 தொகையான காணி விற்பனை முற்பண மீதியில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொத்தமாக ரூபா 11,222,992 தொகையான மீதி | கணக்கீடு செய்யப்பட்டுள்ள இந்த காணி விற்பனை முற்பணங்கள் கூடுதலாக 2002 - 2004 காலப் பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலாகும். மேற்கூறிய காணிக் | விற்பனை முற்பண மீதிகளை தீர்த்துவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அதனை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக தற்பொழுது அமைச்சரவைக்கு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரம் கிடைத்தததன் பின்னர் மேற்கூறிய தீர்த்துவைக்கப்படாத முற்பண கொடுக்கல் வாங்கல்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 14,080,850 தொகையான காணி குத்தகை முற்பண கணக்கு மீதியில் உள்ளடக்கப்பட்ட 269 நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 11,215,850 முற்பணம் 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தும் உரிய காணியை சட்டரீதியாக குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது முற்பணத்தை மீண்டும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2002 - 2004 காலப்பகுதியில் ஒப்படைக்கப்பட்ட 219 காணிகளின் 11,942 ஏக்கர்களில் தற்பொழுது செழிப்பாக பயிர்ச் செய்கை பண்ணப்பட்டுள்ள 1156 ஏக்கர் காணியானது புலனாய்வு உத்தியோகத்தர்களின் மூலம் களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. 2022-02-17 ஆந் திகதிய 11738 ஆம் இலக்க ஆணைக்குழு தீர்மானத்தின் படி அமைச்சரவை அங்கீகாரத்திற்காக வரைபாக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் 2022-04-20 ஆந் திகதி காணி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பின்னர் அமைச்சரவைக்குச் சமர்பிப்பதற்கு முன்னர் உரிய குத்தகைதாரர்களை சுற்றுலா மற்றும் காணி அமைச்சிற்கு அழைத்து கலந்துரையாடி அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | காணி குத்தகை பணத்தினை தாமதமின்றி தீர்த்து வைத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் சுட்டிக்காட்டப்படுகின்ற மதிப்பீட்டுக் கட்டண முற்பணம் ரூபா 48,330,211 ஆக இருந்ததுடன் அதன் ஆரம்ப மீதியாக காட்டப்படுகின்ற ரூபா 40,633,774 பெறுமதி 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக திர்த்துவைக்கப்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ஏதாவது நிலுவையான மதிப்பீட்டுக் கட்டணம் காணப்படுகின்றதா என்பது தொடர்பாக விசாரித்து 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் திர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி தீர்த்துவைத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11ஆம் பிரிவு | நிறுவனத்தின் மிகை நிதியினை முதலீடு செய்வதற்கு முன்னர் உரிய அமைச்சரின் அங்கீகாரம் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கொண்ட ரூபா 3,564,384,482 முதலீட்டிற்காக உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளவில்லை. | அங்கீகாரத்தினை வேண்டி 2022-04-05 ஆந் திகதி நிதி அமைச்சிற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் இன்றுவரை பதில் கிடைக்கவில்லை. | முதலீடு செய்யும் போது நிதி அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவு | ஆணைக்குழு ஆரம்பத்திலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான வரிக்காக பதிவுசெய்யப்பட்டிருக்காததுடன் அந்த அதிகாரச் சட்டத்தின் மூன்றாவது பட்டோலையில் குறிப்பிட்ட நிறுவனங்கள் மாத்திரம் அத்தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவதாக | 1972 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருமான வரிக்காக பதிவுசெய்தல் அல்லது எந்த வருமானவரி கொடுப்பனவும் | உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வரி விடுதலைச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கருதி வரி செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழு அதில் குறிப்பிட்ட நிறுவனம் இல்லாத போதிலும் வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிறுவனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | |
| (i) | II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தி | பதில் கடமை நியமனம் செய்யப்படுவதானது நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக பரிகாரமாக உள்ள போதிலும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (காணி), பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் செயலாளர்) ஆகிய மூன்று பதவிகளுக்காக பதில் கடமை அடிப்படையில் உத்தியோகாத்தர்கள் 2021 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பதவிக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த:துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் நாயகம் பணிப்பாளர், நிருவாகம் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக 2023-01 - 16 ஆந் திகதி அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. பணிப்பாளர் நாயகம் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு பகிரங்க அறிவித்தல் வெளியிடப்பட்டு 2023-07-11 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது. அக்கடிதத்தின் மூலம் பணிப்பாளர் சபை செயலாளர் சுயாதீனமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனால் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது ஏனைய செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒரு உத்தியோகத்தர் பணிப்பாளர் சபை செயலாளராக நியமித்தல் பொருத்தமற்றது எனக் காட்டப்பட்டுள்ளதுடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் | தாமதமின்றி வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விடயப் பரப்பிற்கு இணங்க பணிப்பாளர் செயலாளரின செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக கிரய பிரதிபலன்களை கருத்தில் கொண்டு பெறுகை நடைமுறையினைப் பின்பற்றி தொழில்சார் நிறுவனத்தின் சேவையைப் பெற்றுக்கொள்ளுதல் பொருத்தமானது என அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது . எனவே செயலாளர், பணிப்பாளர் நிருவாகம் பதவி, செயலாளர் மற்றும் பணிப்பாளர் நிருவாகம் ஆக இரண்டு பதவிகளாக பிரிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு 2023-05-15 ஆந் திகதி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்காக அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அந்த ஆட்சேர்ப்புக்களை தனித்தனியாக மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | V ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பந்தி | அரசாங்க சேவையில் பதவி வகிக்கும் எந்தவொரு உத்தியோகத்தரும் அரசாங்க சேவையின் ஏனைய பதவியில் சேவையைப் பொறுப்பேற்பதற்காக தாம் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இல்லாது ஒரு உத்தியோகத்தர் 2020 ஒக்தோபர் 23 ஆந் | இந்த நிறுவனத்தின் செயற்திட்ட மற்றும் புலனாய்வு பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரணங்கள் கம்பனியின் பிரதி பொது முகாமையாளர் நிருவாகம் நிரந்தர பதவி அடிப்படையில் சேவைக்கு இணைந்துள்ளார் என | மிகையாக செலுத்திய சம்பளத்தையும் படிகளையும் மீள அறவிட்டு தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திகதியிலிருந்து 2022 மார்ச் 31 ஆந் திகதி வரை ஆணைக்குழுவின் செயற்திட்ட பணிப்பாளர் பதவியில் சேவையாற்றிக் கொண்டு இருக்கும் போது 2021 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மஹநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரணங்கள் கம்பனியின் பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம்) பதவிக்காக ஒரு ஆண்டு நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டு நிரந்தர அடிப்படையில் சேவைக்கு இணைந்திருந்தார். ஒரே காலத்தில் 02 நிறுவனங்களிலிருந்து சம்பளமும் படியும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிண்ங்க ஆணைக்குழுவினால் உரிய உத்தியோகத்தரின் வருகை மற்றும் வழங்கிய சேவை தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது சம்பளமும் படியுமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 2,038,979 பணம் செலுத்தப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

வெளிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 2022-10-27 ஆந் திகதிய கடிதத்தின் மஹநெகும இயந்திர உபகரண கம்பனியின் பொது முகாமையாளரிடமிருந்து 2020-10-29 ஆந் திகதியிலிருந்து 2022 மார்ச் மாதம் வரையான காலத்தில் அந்த நிறுவனத்தின் சட்டத்தரணி பி.ஏ ஹசிதகுமார அவர்கள் பிரதி பொது முகாமையாளராக (நிருவாகம்) சேவையாற்றியுள்ளார் எனவும் சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் 2022-11-03 ஆந் திகதிய கடித்தின் மூலம் தெரியப்படுத்தியுள்ளார். எவ்வாறாயினும் கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டவாறு ஆணைக்குழுவில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது மேற்கூறிய நிறுவனத்தில் சேவைக்கு இணைந்துள்ளதுடன் அதுபற்றி ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தவில்லை. இந்த நியமனம் காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 47(3)ஆம் பிரிவின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் நியமித்து என்னால் கடமை ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேலும் எனது மேற்பார்வையின் கீழ் கடமைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிறைவேற்றப்பட்டது. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமானக் கோவை நி.பி 1645 (அ) | ஆணைக்குழுவின் 13 வாகனங்களின் வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் முறைப்படியாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவில் காணப்படுகின்ற வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் 2020 ஆம் ஆண்டிலிருந்து நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. கொடுப்பனவுகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகளின் வசதிகளுக்காக தனியான ஒரு பதிவேடு நிருவாகப் பிரிவின் மூலம் பேணப்பட்டு வருவதுடன் அத்தகவல்கள் பின்னர் ஒவ்வொரு வாகனத்திற்குரிய சம்பவக் குறிப்பு புத்தகத்திற்கு உள்ளடக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க அந்த அனைத்து தகவல்களும் ஒரு மாதத்திற்குள் சரியாக உரிய சம்பவக் குறிப்பு புத்தகத்திற்கு உள்ளடக்குமாறு நிருவாகப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டள்ளது. | வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் முறைப்படியாக நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.6 ஆம் பந்தி | நிறுத்திவைத்தல் பணமானது செயற்பாடுகளின் உத்தரவாத காலப்பகுதி வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் அல்லது வேலைகள் முழுமையாக முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் நிபந்தனையின்றி மற்றும் இரத்துச் செய்யமுடியாத பிணையின் அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 73,247 தொகையான 10 சதவீத நிறுத்திவைத்தல் பணம் | மொனராகலை மாவட்ட அலுவலக கட்டிடத்தினை திருத்தம் செய்தலானது மொனராகலை பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என அந்த மொனராகலை மாவட்ட பணிப்பாளரிடமிருந்தும் பிரதேச செயலகத்திடமிருந்தும் எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்பட்டத | பொறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| குறைபாட்டு உத்தரவாத காலப்பகுதி பூரணப்படுத்தப்படாது மற்றும் கட்டிட திருத்தங்கள் முடிவடைந்ததன் பின்னர் இரத்துச் செய்யமுடியாத பிணையையும் பெற்றுக்கொள்ளாது அப்பணம் செலுத்தப்பட்டுள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | ன் பின்னர் பிரதேச செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வவுச்சருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 518,199,960 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 310,284,854 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 207,915,106 முன்னேற்றம் அவதனிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு காணிகளை சுவீகரித்தல், காணிகளை விற்பனை செய்தல், காணிகளை குத்தகைக்கு வழங்குதல் வருமானம் முறையே ரூபா 119,884,134, ரூபா 136,271,322, ரூபா 51,395,803 ஆல் அதிகரித்தல் மற்றும் நிதி வருமானம் ரூபா 54,214,914 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2. பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் காணி விற்பனை வருமானம், காணி குத்தகை வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் 65, 24 மற்றும் 46 சதவீதங்களால் அதிகரிக்கையில் காணிப் பயன்பாட்டுக் கட்டணம் மற்றும் கருங்கல் குத்தகை வருமானம் 71 சதவீத மற்றும் 160 சதவீத பெறுமதியால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பணிக்கொடை செலவுகள், வாகன பழுதுபார்த்தல் செலவுகள், போக்குவரத்து படிகள், வாகன வாடகை செலவுகள் என்பன 7 சதவீதத்திலிருந்து 88 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தும் எரிபொருள் படி மற்றும் சட்டச் செலவுகள் முறையே 31 சதவீதத்தாலும் 50 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நடைமுறை விகிதம் 23:1 ஆக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் அந்த விகிதம் 29:1 ஆகும். அதற்கிணங்க நடைமுறை விகிதமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தும் தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளை விட கூடுதலாக நடைமுறைச் சொத்துக்களில் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2021 ஆம் ஆண்டில் 11 சதவீதமாகக் காணப்பட்ட அளவுகோல் விகிதமானது மீளாய்வாண்டின் போதும் அப்பெறுமதியைக் கொண்டிருந்தும் ஆணைக்குழுவினால் முழுப்பொறுப்பினையும் தீர்த்துவைப்பதற்குத் தேவையான அளவிற்கு மேல் உரிமை மூலதனம் பேணப்பட்டு வந்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆணைக்குழுவின் 11120 ஆம் இலக்க 2020 யூலை 22 ஆந் திகதிய ஆணைக்குழு பத்திரம் தொடர்பான தீர்மானத்தின் மூலம் காணிப் பதிவேட்டினைத் தயாரிக்கும் தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு 03 மாத காலத்திற்காக வாடகை அடிப்படையில் 10 மோட்டார் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2021 ஏப்ரல் மாதத்திலிருந்து 2022 நவம்பர் வரையான காலத்திற்கு ரூபா 21,573,583 செலவு செய்யப்பட்டிருந்தும் காணிப் பதிவேட்டினைத் தயாரிக்கும் செயல்முன்னேற்றம் காணப்படவில்லை. | ஆணைக்குழுவின் காணிப் பதிவேட்டினைத் தயாரிக்கும் நடவடிக்கைக்காக 10 கெப் வாகனங்கள் உடன்படிக்கை செய்யப்பட்ட 03 மாத காலப்பகுதிக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந் தன. 2021 கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை 2022 ஆம் ஆண்டின் தொடக்க அரைப்பகுதி வரை காணப்பட்டிருந்தமையும் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் இந்த தொற்றுநோய்க்கு உள்ளாகியிருந்தமையின் காரணமாக களத்திற்குச் சென்று மக்களைச் சந்தித்து தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கையை முறையாக மேற்கொள்வதற்குத் தடையாக இருந்தது. அவ்வாறே இக்காலப்பகுதிக்குள் அப்போது காணப்பட்ட அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் வடமத்திய மாகாணத்தின் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சேதனப் பசளையை உற்பத்தி செய்யும் முன்னோடி செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல் இடம்பெற்றது. வடமத்திய மாகாணத்திற்கு அருகாமையில் அமுல்ப்படுத்தப்பட்ட சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டத்திற்காக பொருத்தமான காணியை இனங்காணும் | சிக்கனமற்ற செலவுகளைத் தவிர்த்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கடமைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இந்த வாகனம் அக்காலப்பகுதியின் போது ஆனுராதபுரம் மாவட்டத்திற்கு அருகாமையில் காணிப் பதிவேட்டினைத் தயாரிப்பதற்காக ஈடுபடுத்துதல் இடம்பெறவில்லை. அந்த வாகனம் ஓடுவதற்கு ஈடுபடுத்தப்படாதிருந்தும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்திற்கான மாதாந்த வாடகையினை செலுத்த வேண்டியிருந்தது. அந்த கெப் வாகனத்திற்கு மத்தியில் சிலவற்றையேனும் சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துதல் மற்றும் அந்த வாடகையினை சேதனப் பசளை செயற்திட்டத்தினூடாக அறவீடு செய்தல் பொருளாதார ரீதியாக வினைத்திறனானது என அவதானிக்கிறேன். | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தென் மாகாண இளைஞர் சேவை நிலையம் விளையாட்டு கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்கு தென் மாகாண விளையாட்டு அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மாகுருகொட தோட்டத்தின் 3532 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டின் கீழ் 16 ஏக்கர் காணிக்கான இழப்பீட்டுப் பணம் ரூபா 31,500,000 ஆக 2012 ஆகஸ்ட் 08 ஆந் திகதி பத்தேகம பிரதேச செயலகத்தினால் ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தியிருந்தது. | இழப்பீட்டுப் பணமான ரூபா 31,500,000 தொகை இன்றுவரை செலுத்தப்படவில்லை. மாவட்ட அலுவலகத்தின் மூலம் அடிக்கடி விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தும் அவர்களுக்கு ரூபா 800,000 பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது எனவும் மிகுதிப் பணம் இன்றுவரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க மேற்கூறிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதியில் தொடர்ந்தும் பேண வேண்டியிருந்தது. | இழப்பீட்டுப் பணத்தை அறவீடு செய்வதற்கும் கணக்கீட்டுத் தவறினை சரிசெய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே ரூபா 72,413,609 செலவு செய்து உரிய நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்று தென்மாகாண பிரதம செயலாளரினால் 2018 மே 10 ஆந் திகதிய CSS/4/6/1/198 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் காணி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சிற்கு ஆணைக்குழுவின் தலைவருக்கான பிரதியுடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இக்காணிக்குரிய இழப்பீட்டுப் பணம் தொடர்பான தீர்மானம் 2012 ஆம் ஆண்டின் போது கிடைத்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டு தொடர்பான அந்த இழப்பீட்டுப் பணம் பிழையாக மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள 530 நபர்களில் 152 நபர்கள் அதாவது 28 சதவீத்திற்காக மாத்திரம் குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் 378 குத்தகைதாரர்களுடன் சட்டரீதியான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருக்கவில் லை என அவதானிக்கப்பட்டது. | குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிக்காக நீண்டகாலமாக பயன்படுத்தி குத்தகைப் பணமும் செலுத்துகின்ற குத்தகைதாரர்களுக்கு உரிய செயறதிட்ட குழுவின் அங்கீகாரம், ஆணைக்குழுவின் அங்கீகாரம், கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் அமைச்சரவை அங்கீகாரம் என்பன இல்லாத கோவைகள் காணப்படுதல் மற்றும் தொடக்க 05 ஆண்டுகளுக்குரிய குத்தகைப் பணத்தை செலுத்தியுள்ள எனினும் குத்தகைதாரர்கள் குத்தகை உடன்படிக்கை செய்யாததன் அடிப்படையில் நிகழ்கால குத்தகை செலுத்தாதுள்ள குத்தகைதாரர்கள் இருத்தல் போன்ற விடயங்களின் காரணமாக குத்தகை உடன்படிக்கையினை வழங்குவதற்கு முடியாதுள்ளது. இந்த | குத்தகைக்கு வழங்கியுள்ள காணிக்ளுக்காக சட்டரீதியான உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குத்தகைக்கு வழங்குதல் நிண்டகாலம் எடுத்துள்ளதனால் குத்தகைக்கு வழங்கும் நடைமுறையினை தொடக்கத்திலிருந்து பின்பற்றுதல் சிக்கலான செயற்பாடு என்பதனால் இதற்காக 784 ஆவது ஆணைக்குழு கூட்டத்திற்கு ஆணைக்குழு பத்திரத்தினை சமர்பித்திருந்ததுடன் அதற்காக 2023-02-02 ஆந் திகதிய P-1150 ஆம் இலக்க திர்மானம் கிடைத்துள்ளது. எனினும் மேற்கூறிய தீர்மானத்திற்கு இணங்க குத்தகை உடன்படிக்கைகளை வழங்கும் போது குறிப்படத்தக்க அளவு செயல்முன்னேற்றமானது இன்றுவரை பெற்றுக்கொள்ளப்படாதிருந்த துடன் 2023-07-13 ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்டத்தின் போது உள்ளக சட்டதரணிக்கு மேலதிகமாக வெளிவாரி சட்டத்தரணிகள் சபையும் இதற்காக நியமிக்கப்பட்டள்ளதுடன் அதற்கிணங்க அடுத்துவரும் 03 மாதங்களுக்குள் அது சம்பந்தமான செயல் முன்னேற்றத்தினை உங்களுக்கு அறிவிப்பேன். | |
| (இ) | குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குதல் தொடர்பாக 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 620,015,611 ஆக இருந்ததுடன் அந்த நிலுவைப் பணங்களில் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 101,609,039 அல்லது 16 தசவீதம் அளவிற்கு குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. அவ்வாறே 2022 ஆம் ஆண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 243,225,922 தொகையில் அறவிடப்பட்ட பெறுமதி ரூபா | 2020 கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார பணவீக்கமானது குத்தகைதாரர்களைப் போல் இரசாயனப் பசளையைப் பயன்படுத்துதல் குறைவடைந்ததன் மூலம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற குத்தகைதாரர்களும் அதிக சிக்கலுக்கு உள்ளாகியுள்ளனர். அதற்கிணங்க குத்தகைப் பணத்தை செலுத்தும் இயலுமை இல்லாததனால் அதற்காக நிவாரண காலத்தினை வழங்குமாறு | ஆக்கபூர்வமாக குத்தகை வருமானத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 71,140,458 அல்லது 29 சதவீதமாக இருந்தது. அதற்கிணங்க வருமானத்தை சேகரிக்கும் செயற்திறனின்மை காணப்படுகின்றது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அடிக்கடி குத்தகைதாரர்களிடமிருந்து வேண்டுதல்கள் கிடைத்துள்ளது. அதற்கிணங்க நாட்டில் காணப்படுகின்ற நிலைமையையும் கைத்தொழிலாளர்களின் எதிர்காலத்தில் நிலைத்திருப்பதனை போல ஆணைக்குழுவின் வருமானத்தையும் அதிகரிக்கும் ஒரே நோக்கில் வருடாந்த குத்தகைப் பணத்தை தவணை ரீதியாக வேனும் அறவீடு செய்வதற்கும் நீண்டகாலமாக குத்தகை செலுத்த தவறிய குத்தகைதாரர்களுக்கு துரிதமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிண்ங்க அடுத்துவரும் ஆண்டுகளில் இந்த குத்தகையை அறவிடுதலானது உயர்ந்த சதவீதத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் உள்ளது எனவும் தெரிவிக்கிறேன். | |
| (ஈ) | 2019 மே 22 ஆந் திகதி ஆணைக்குழுவினால் ஒன்றித்த கணக்கீட்டு மென்பொருள் முறைமையானது ரூபா 8,500,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அத்தகவல் முறைமையின் மூலம் பெறவேண்டிய காணிக் குத்தகை பணம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் இயலுமையானது 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டளவில் காணிக் குத்தகைப் பணம் தொடர்பான விபரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் கணனி முறைமையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்த மென்பொருள் இன்னும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளதுடன் உரிய கம்பனியுடன் கலந்துரையாடி துரித நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | ஒன்றித்த கணக்கீட்டு மென்பொருள் முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஆணைக்குழுவிற்கு முழுமையான ஒன்றித்த கணனி முறைமையினை உருவாக்குதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்ப்படுத்துவதற்காக 2002 | 2022-10-21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போதும் இது சம்பந்தமாக முழுமையான ஒரு | முழுமையான ஒன்றித்த கணனி முறைமையினை உருவாக்குதல், அபிவிருத்தி செய்தல், அமுல்ப்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 17,000,000 பணத்தினை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அல்லது உரிய கணனி முறைமையினை ஸ்தாபிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையினை பொது முயற்சிகள் தொடர்பான குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது. அதற்கிண்ஙக வழங்கிய சிபாரிசின் அடிப்படையில் காணி அமைச்சின் கணக்காய்வுப் பிரிவினால் புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டு அவர்களினால் 2022-11-28 ஆந் திகதிய கடித்தின் மூலம் குறிப்பிடப்பட்டதானது கணனி மென்பொருள் முறைமையை ஸ்தாபிப்பதற்குரிய உபகரணம் இல்லாததனால் அப்புலனாய்வினை தொடர்ந்து மேற்கொள்ள முடியாது என்பதாகும். அதன் பின்னர் ஆணைக்குழுவில் கணனி முறைமையை ஸ்தாபிக்கும் போது ஏற்பட்டுள்ள நிதி ஒழுங்கீன்ங்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் 2023-05-18 ஆந் திகதி நடைபெற்ற 790 ஆவது ஆணைக்குழு கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இது சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து ஆலோசனையை வேண்டி விபரமான ஒரு அறிக்கையை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் நாயகத்தின் மூலம் பணிப்பாளருக்கு (சட்டம்) அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | என்பவற்றிற்காக செலுத்திய பணத்தை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதனுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று/ சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஆணைக்குழுவின் காணிகளை அளவீடு செய்து ஒழுங்குபடுத்துகின்ற சந்தர்ப்பத்தில் காணித்துண்டுகளைப் பெற்றவர்களிடமிருந்து மீளளிப்புச் செய்வதற்கு உட்பட்டு காணிகளை அளவீடு செய்து அதிகாரம்பெற்ற நில அளவையாளருக்கு 2019, 2020 | தற்பொழுது நில அளவை செய்துள்ள சில காணிகள் சம்பந்தமாக CA(W) 399/2022 ஆம் இலக்கத்தின் கீழ் நமுனுகுல பெருந்தோட்ட கம்பனியினாலும் CA(W) 161/2021 ஆம் இலக்கத்தின் கீழ் | காணித்துண்டினைப் பெற்றவர்களுக்கு காணியை வழங்கும் சந்தர்ப்பத்தில் நில அளவை செய்து கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட மொத்தமாக ரூபா 33,229,487 பணத்தில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 6,142,990 மாத்திரம் மீள்மளிப்புச் செய்யப்பட்டிருந்தது. | தலவகெலே பெருந்தோட்ட கம்பனியினாலும் ஆணைக்குழுவினை எதிர்தரப்பினராக்கி முறைப்பாட்டுக் கம்பனியால் ஆணைக்குழுவிற்கு எதிராக தடை உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை, 2019 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வந்த கொவிட் தொற்றுநோய் மற்றும் நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார நிலைமையில் காணித்துண்டுகளைப் பெற்றவர்கள் பணத்தினைச் செலுத்துவதற்கு முன்வந்திருக்காமை தாமதத்திற்கு காரணமாக இருந்தது எவ்வாறாயினும் இப்பணத்தை அறவீடு செய்வதற்கு பணிப்பாளர் காணிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (எ) | ஆணைக்குழுவினால் அங்கீகரித்த பதவியணிக்குள் உள்ளடக்கப்படாத செயற்திட்ட மற்றும் புலனாய்வுப் பணிப்பாளர், செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர், புலனாய்வு உத்தியோகத்தர், சட்ட ஆலோசகர், சட்டத்தரணிகள் ஆகிய சேவைகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 14 நபர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். உரிய சேவை உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு அல்லது நிரந்தரமாக ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றாது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,768,944 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | 1972 இன் 01 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தில் ஆணைக்குழு சம்பந்தமாக அமைச்சருக்கு காணப்படுகின்ற அதிகாரத்திற்கு இணங்க மேற்கூறிய அதிகாரச் சட்டத்தின் 47 (3) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சம்பந்தமாக புலனாய்வு செய்து அறிக்கையிடுவதற்காக ஒரு நபரினை நியமிக்கும் அதிகாரத்திற்கு இணங்க அமைச்சர் 14 நபர்களின் சேவைகளைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 47(3) ஆம் பிரிவின் பிரகாரம் தேவையான நியமனங்களை வழங்குவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணி அமைச்சர் உரிய நியமனதாரர்களுக்கு அமைச்சரினால் நியர்ணயிக்கப்பட்டு | சேவை உடன்படிக்கைகளை மேற்கொள்வதும் உரிய புலனாய்வினை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிவுறுத்தப்பட வேண்டியதுடன் செயலாற்றல் சம்பந்தமாக அறிக்கைகளை பேணுதலும் மதிப்பீடு செய்தலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்படைக்கப்படுகின்ற கடமைகள் தொடர்பான அறிக்கையை அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் உரிய நியமனங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளதனால் 2022-02-28 ஆந் தகிதி மற்றும் 2022-03-22 ஆந் திகதி புலனாய்வு பணிப்பாளருக்கு எழுத்துமூலம் கடமை ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அடிக்கடி அவர்களுக்கு பல்வேறு கடமைகள் வாய்மொழி மூலம் கௌரவ அமைச்சரினாலும் என்னாலும் வழங்கப்பட்டன. அவரினால் மாதாந்தம் செய்யப்படுகின்ற கடமைகள் நிறைவேற்று பணிப்பாளருக்கு அவரினால் அறிக்கையிடப்பட்டதன் பின்னர் மேற்கூறிய ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | ஆணைக்குழுவின் நாவலப்பட்டி டில்டன்வத்த காணியின் தேயிலை தொழிற்சாலையுடனான 02 ஏக்கர் 01 ரூட் 05 பேர்சஸ் அளவான காணி முப்பது ஆண்டுகள் குத்தகையின் அடிப்படையில் 1997 ஆகஸ்ட் 30 ஆந் திகதியிலிருந்து வருடாந்த குத்தகை ரூபா 270,000 வீதம் ஒரு தனியார் கம்பனிக்கு காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 22(1)(ஆ) பிரிவின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் 2008 ஆம் ஆண்டின் போது அக்கம்பனியினால் ஏனைய தனிப்பட்ட குத்தகைதாரருக்கு அக்கம்பனியின் வியாபாரப் பெயருடன் இக்காணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் 1997 ஆம் ஆண்டிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 25 ஆண்டுகளுக்காக அறவிட | நாவலப்பிட்டியில் அமைந்துள்ள டில்டன் வத்த காணியின் 02 ஏக்கர் 01 ரூட் 05 பேர்சஸ் அளவான காணி 30 ஆண்டுகளுக்காக ஒரு தனியார் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னர் 2008 ஆம் ஆண்டின் போது திலக் குமார உடுகம எனும் நபரினால் இக்காணி பொறுப்பேற்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு வரை குத்தகை செலுத்தப்படவில்லை. அதன் காரணமாக நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் 79899/18 ஆம் இலக்க 2021-03-26 ஆந் திகதிய வழக்கு தீர்ப்பின் பிரகாரம் அவரை இந்த ஆதனத்திலிருந்து நீக்குவதற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்தது. 2022-11-09 ஆந்திகதி ஆணைக்குழு கூட்டத்தின் போது நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக பணிப்பாளர் | நிலுவைக் குத்தகைகளை அறவீடு செய்வதற்கும் காணிகளை மீண்டும் பொறுப்பேற்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய ரூபா 18,403,926 நிலுவைக் குத்தகையினை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது காணியை மீளப்பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் குத்தகை உடன்படிக்கையினை வழங்குவதற்கோ அல்லது எந்தக் குத்தகையும் செலுத்தாது ஒரு வெளிததரப்பினர் காணியை பயன்படுத்துவது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திடமிருந்து ஒரு அறிக்கையினைப் பெற்று எடுக்கவேண்டிய மேலதிக நடவடிக்கை தொடர்பாக மாவட்ட அலுவலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஐ) | கொழும்பு மாவட்டத்தில் டெம்பில்பேக்வத்த காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 8749 ஆம் இலக்க 2005 நவம்பர் 27 ஆந் திகதிய திட்ட வரைபடத்தில் 32, 34 மற்றும் 35 ஆம் இலக்க காணித்துண்டுகளுக்குரிய 02 ஏக்கர் 01 ரூட் 30 பேச்சஸ்கள் மற்றும் அந்த காணியின் 31 ஆம் இலக்க காணித்துண்டின் 0.1877 ஹெக்டயர் அளவானவை காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 22(1)(ஆ) பிரிவின் கீழ் இரும்புக் கம்பி மற்றும் கெல்வனைஸ் செய்யும் உற்பத்தி தொழிற்சாலைக்கு 30 ஆண்டுகள் வரை பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்டு வருடாந்த அடிப்படையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை குத்தகையை மீளாய்வு செய்யும் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழு விற்கு கிடைக்க வேண்டிய குத்தகை முழுவதுமான ரூபா 32,475,109 தொகையில் எப்பணமும் இன்றுவரை அறவிடப்பட்டிருக்காததுடன் அந்த நிறுவனத்திற்கு குத்தகை உடன்படிக்கையினை | டெம்பில்பேக் வத்த அல்லது லேலன்ட் வத்த காணி தொடர்பாக நில அளவையாளர் நாயகத்தினால் அளவீடு செய்து தயாரிக்கப்பட்ட 8749 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 31, 32, ,34 மற்றும் 35 ஆம் இலக்க காணித்துண்டுகள் கைத்தொழில் அமைச்சின் மூலம் ரெபிமெக் தொகுதிக் கம்பனிக்கு பயன்படுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. பரப்பளவு 450 பேச்சஸ்களாகும். இந்த 04 காணித்துண்டுகள் தொடர்பாக 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய குத்தகைப் பணமாகிய ரூபா 32,475,109 தொகை 2023-07-30 ஆந் திகதியளவில் கொடுப்பனவு செய்யப்படும் என வருமானப் பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | முறையான குத்தகை உடன்படிக்கையின் அடிப்படையில் காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கும் நிலுவையான குத்தகைகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கும் முடியாதிருந்தது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஒ) | ஆணைக்குழுவின் காணிப் பதிவேட்டினைத் தயாரிப்பதற்காக 2018 யூன் 27 ஆந் திகதிய அமைப/18/1126/829/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஒரு ஆண்டு காலத்திற்கு 214 உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அவர்களை நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அவ்வாறு இருந்தும் சேர்த்துக்கொள்ளப்பட்ட அந்த 08 ஊழியர்களுக்கு ஆணைக்குவில் காணப்படும் தனிப்பட்ட ரீதியாக காணி வழங்கும் நடைமுறையின் கீழ் காணிகளை வழங்குவது தொடர்பாக திட்ட வரைபடத்திலும் திருத்தங்களை மேற்கொண்டு உறுதிகளைத் தயாரிப்பதற்கு உறுதிப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் இந்த உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததானது காணிப் பதிவேட்டினைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இருந்த போதிலும் அச்செயற்பாடு நிறைவேற்றப்படாதிருந்தும் இவ்வாறு நடைபெற்றிருந்தது என அவதானிக்கப்பட்டது. | ஆணைக்குழுவில் செயற்பாடாக சேவையாற்றும் ஊழியர்களுக்கு காணித்துண்டுகளை வழங்கும் தீர்மானத்திற்கு இணங்க அடிப்படைத் தகமைகளாவது ஆணைக்குழுவில் தொடர்ச்சியாக 05 ஆண்டுகள் சேவைக் காலத்தினை பூரணப்படுத்தி இருப்பதுவும் ஒழுக்கத்திற்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தலும் ஆகும். அவற்றிற்கு மத்தியில் சில ஊழியர்கள் பல மாவட்டங்களில் காணித் துண்டுகளை இனங்கண்டு உரிய காணித்துண்டுகளில் ஒரு காணித் துண்டினை ஊழியர் அடிப்படையில் வழங்குமாறு வேண்டிக் கொண்டதன் அடிப்படையில் அது தொடர்பான தொடக்க செயற்பாடுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்கு இதுவரை காணித்துண்டுகளுக்குரிய உறுதியினை வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும் அது சம்பந்தமாக அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அமைச்சரை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதனால் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கேனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என மேலும் தயவாக தெரிவித்துக்கொள்கிறேன்.<br>மேலும் 2/1/145 (IV) ஆம் இலக்க 2023-05-24 ஆந் திகதிய எனது உள்ளக | சட்டரீதியற்றதான இந்த உத்தியோகத்தர்களுக்கு காணி வழங்கும் நடைமுறையினை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழிகாட்டிக் கோவையின் மூலம் ஊழியர்களுக்கு காணிகளை வழங்கும் நடைமுறையினை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | களுத்துறை மாவட்டத்தில் கேகாலை தோட்டக் காணியில் 10 ஏக்கர்களை தேயிலைப் பயிர்ச் செய்கைக்காக ஒரு தனி நபருக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 8393 ஆம் இலக்க 2013 ஏப்ரல் 30 ஆந் திகதிய ஆணைக்குழு பத்திரத்திற்குரிய தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டிலிருந்து இக்காணி தொடர்பாக எந்த குத்தகைப் பணமும் உரிய குத்தகைதாரரினால் செலுத்தப்படாதிருந்ததுடன் செல்லுபடியாகும் உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமை விபரத்தின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 1,824,000 பணத்தினை அறவீடு செய்வதற்கு அல்லது காணியை பொறுப்பேற்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2012-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவைக் குத்தகை பணமாகிய ரூபா 1,824,000 தொகையில் ரூபா 50,000 பணம் 2023-01-12 ஆந் திகதி குத்தகைதாரரினால் களுத்துறை மாவட்ட அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டது. நிலுவையான குத்தகைப் பணத்தினை துரிதமாக செலுத்துவதாக குத்தகைதாரரினால் எழுத்துமூலம் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது. நிலுவையான குத்தகைப் பணத்தினை அறவீடு செய்வதற்கும் காணியின் உறுதி மாற்றத்தினை மீளப் பொறுப்பேற்பதும் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டப் பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டள்ளதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கையிடப்படும் எனத் தெரிவிக்கிறேன். | முறையான குத்தகை உடன்படிக்கையின் அடிப்படையில் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கும் நிலுவையான குத்தகைகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 22(1)(ஆ) பிரிவின் பிரகாரம் காலி மாவட்டத்தில் அக்மீமன பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள லெட்சுமி பீ தோட்டம் எனும் பெயரிலான காணியில் 08 ஏக்கர்களை 30 ஆண்டுகள் காலத்திற்காக 05 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டாக குத்தகையினை மீளாய்வு செய்து 2005 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுபெறுமதிக்கு அந்த ஆண்டிலிருந்து "நிவாரண | 2022-12-31 வரை அறவிட வேண்டிய குத்தகைப் பணம் ரூபா 6,998,800 ஆகும். 2005 இலிருந்து இன்றுவரை எந்த குத்தகைப் பணமும் செலுத்தப்படாததுடன் மதிப்பீடு மற்றும் சேவைக்கட்டணம் தொடர்பாக ரூபா 50,000 தொகை 2005-08-15 ஆந் திகதி செலுத்தப்பட்டது. இக்காணியில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் 2020-05-18 ஆந் | காணியானது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் நிலுவையான குத்தகைகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சிறுவர் அபிவிருத்தி மன்றம்'' எனும் பெயரிலான அமைப்பிற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் உரிய காணி சம்பந்தமாக ஒரு பிணக்கு உருவாகியுள்ளது எனக்கூறி காணியை பயன்படுத்தும் அதிகாரமானது ஒரு தலைப்பட்டசமாக ஆணைக்குழுவினால் 2021 ஆம் ஆண்டின் போது பொறுப்பேற்கப்பட்டிருந்தது என கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 6,998,800 பணத்தினை அறவீடு செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

திகதி சுவாமி அவர்கள் மரணமடைந்துள்ளார். குத்தகை செலுத்தாமை மற்றும் சுவாமி அவர்கள் மரணமடைந்தமை சம்பந்தமாக 2021-03-26 ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்டத்தின் போது ஒரு தலைப்பட்டசமாக காணியை பயன்படுத்தும் அதிகாரத்தினை பொறுப்பேற்பதற்கு திர்மானிக்கப்பட்டது. இக்காணித் துண்டு தொடர்பாக நிகழ்காலத்தில் ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தையேனும் பெற்றுக்கொள்ளும் எண்ணத்தில் விசேட புலனாய்வு உத்தியோகத்தர் நாமல் பிரேமவர்தன அவர்களினால் 2022-07-20 ஆந் திகதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கிணங்க ஆணைக்குழு பத்திரமானது அடுத்துவரும் ஆணைக்குழு கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

(க) மாத்தளை மாவட்டத்தின் லக்கல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பிரேகுரூப் எனும் பெயரிலான காணி சிதம்பரம் பிள்ளை மற்றும் அவரின் இரண்டு பிள்ளைகளான சிதம்பரம் ஜெகதீசன் மற்றும் சிதம்பரம் ரகுநாதன் என்பவர்களுக்குரியதாக இருந்ததுடன் இக்காணி நக்லஸ் சரணாலயத்திற்குரியதாக இருந்ததன் காரணமாக மாற்று காணியினை வழங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது. அது

| | | | |
|---|---|---|---|
| | சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் வரத்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அனைத்து நியதிச்சட்ட தீர்மானங்களும் அதிகாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அவ்வாறே வெளியடப்படுகின்ற திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் நியதிச்சட்ட தீர்மானங்களில் குறிப்பிடப்படுகின்ற கமத்தொழில் காணிகள் தொடர்பாக எந்த உரிமையாண்மை, உரித்து அல்லது தொடர்புகள் அவ்வாறே வெளியிடப்படுகின்ற திகதியிலிருந்து ஆணைக்குழுவிற்கு இல்லாதிருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக அதிகாரச் சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாதிருந்தும் சிதம்பரம் ரகுனாதனுக்கு பிரேகுரூப் தோட்டம் எனும் காணியிலிருந்து வழங்கப்பட்ட 32 ஏக்கர் பரப்பளவுக்குப் பதிலாக கொழும்பு மாவட்டத்தில் கடுவல பிரதேச செயலகப் பிரிவில் சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தையில் அமைந்துள்ள கனேமுல்ல வயல் காணி இல்லையாயின் கனேதொட தோட்ட காணியில் 11 ஏக்கர்கள் 2022 நவம்பர் 24 ஆந் திகதி சிதம்பரம் | 1972 இன் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் நியதிச்சட்ட தீர்மானத்தினை வர்த்தமானியில் வெளியிட்டதன் பின்னர் அந்த காணி தொடர்பாக எந்த உரிமையாண்மை, உரித்து அல்லது தொடர்புகள் ஆணைக்குழுவிற்கு இல்லாதிருக்க வேண்டுமென 20 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு காணப்படுகின்ற அதிகாரத்திற்கு இணங்க காணியை பரிமாற்றுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு இயலுமை உள்ளதுடன் அதிகாரச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் மூலம் கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு பொது அல்லது விசேட பணிப்புரை செய்யக்கூடியதாக உள்ளதுடன் ஆணைக்குழுவினால் அந்த பணிப்புரை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். அதற்கிணங்க சிதம்பரம் ரகுநாதன் அவர்கள் ஆணைக்குழுவின் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளருக்கு 2021-05-23 ஆந் திகதி விளக்கமளித்துள்ளதுடன் 2021-07-08 ஆந் திகதி கூடிய ஆணைக்குழு அறிவிப்பாளரின் நியதிச்சட்ட தீர்மானத்திற்காக வழங்கப்பட்டுள்ள பெரேபுரூக் தோட்டத்தின் 50 ஏக்கர் 0 ரூட் 00 பேச்சஸ் அளவான காணித்துண்டுகளுக்குப் பதிலாக கொழும்பு மாவட்டத்தின் கடுவலயில் அமைந்துள்ள கனேமுல்ல | அதிகாரச் சட்டத்தின் 44 மற்றும் 47 ஆம் பிரிவுகள் கணக்காய்வு அவதானிப்புக்களுடன் தொடர்பு அற்றதனால் இது தொடர்பாக சுதந்திரமான பரீட்சிப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரகுநாதன் என்ற நபருக்கு வழங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது. | வயல் இல்லையாயின் கனேதொட தோட்டத்தில் 25 ஏக்கர் 0 ரூட் 00 பேர்ச்சஸ் அளவினை வழங்குவது அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய அங்கீகாரத்திற்காக கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் 2022-11-24 ஆந் திகதி கிடைத்துள்ளது. | |
| (ii) | மாத்தளை மாவட்டத்தின் லக்கல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பிரேகுரூப் எனும் பெயரிலான காணிக்குரிய கொள்வனவாளரினால் தமக்கு வழங்கப்பட்டுள்ள காணி நக்ளஸ் சரணாலயத்திற்கு சுவீகரிப்பதற்காக வன பாதுகாப்பு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என கூறப்பட்டிருந்ததுடன் 2021 யூலை 19 ஆந் திகதி பணிப்பாளர் மாத்தளை மாவட்ட காணி மறுசீரமைப்பு அதிகார சபைக்கு விலாசமிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மஹ/403 ஆம் இலக்க அறிவிப்பாளர் சிதம்பரம் ரகுநாதன் என்ற நபருக்கு நியதிச்சட்ட திர்மானம் வழங்கப்பட்டுள்ள மாத்தளை பிரேகுரூப் தோட்ட காணியில் நக்ளஸ் சரணாலயத்திற்காக காணியை சுவீகரிக்கும் உரிமையாண்மை பரீட்சிப்புக்களை நடாத்துகின்ற சந்தர்ப்பங்களில் அக்காணி அளவிற்காக ஆணைக்குழு தொடர்பாக இழப்பீட்டு | 2021-07-08 ஆந் திகதி கூடிய ஆணைக்குழு மஹ/403 ஆம் இலக்க அறிவிப்பாளரின் நியதிச்சட்ட தீர்ப்பிற்காக வழங்கப்படுள்ள பிரேகுரூப் தோட்டத்தில் ஒரு பகுதிக்காக கனேமுல்ல வயல்கள் இல்லையாயின் கனேதொட தோட்டம் எனும் பெயருள்ள காணியில் 25 ஏக்கர் 0 ரூட் 00 பேச்சஸ் அளவினை வழங்குதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அங்கீகாரத்திற்கு இணங்க பணிப்பாளர் / காணி உச்ச எல்லை இனால் 2021-07-19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மாத்தளை மாவட்ட பணிப்பாளரினால் நக்ளஸ் சரணாலயத்திற்கு சுவீகரிப்பதற்கு உத்தேச மஹ/403 ஆம் இலக்க அறிவிப்பாளரின் நியதிச்சட்ட தீர்மானத்திற்கான இழப்பீட்டு உரிமை பரீட்சிப்பு நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவிற்காக முன்வருமாறு தெரியப்படுத்தப்பட்டது. நக்ளஸ் சரணாலயத்திற்கு சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நியதிச்சட்ட தீர்பிற்காக அறிவிப்பாளருக்கு வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை காணப்பட்டிருந்தும் நியதிச்சட்ட திர்மானத்திற்காக மாற்று காணியை வழங்குதலினை ஆணைக்குழு அங்கீகரித்துள்ளதனால் | சுயாதீன ஒரு பரீட்சிப்பு நடாத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிமை கோரலினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அறிவிப்பாளரான வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து நேரடியாக இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமை காணப்பட்டிருந்தும் அதிகாரச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரியதல்லாத காணிக்காக வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து இழப்பீட்டு உரிமையினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வருவதற்காக சட்டரீதியான இயலுமை இல்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 09 ஆந் திகதி மேற்கூறிய இழப்பீடு ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாக இருக்கவில்லை. | பிரேகுரூப் தோட்டத்தின் அறிவிப்பாளரின் நியதிச்சட்ட திர்மானத்திற்காக வழங்கப்பட்டவுள்ள காணியின் அளவு சம்பந்தமாக உரிமை கோருவதற்கு ஆணைக்குழுவிற்கு சந்தர்ப்பம் உள்ளது. . லக்கல பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள 2022 -05-18 ஆந் திகதிய கடிதத்த்திற்கு இணங்க பிரேகுரூப் தோட்டத்தின் ஒட்டுமொத்த நில அளவினையும் சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (iii) | மாத்தளை மாவட்டத்தில் லக்கல பிரசேத செயலகப் பிரிவில் அமைந்துள்ள பிரேகுரூப் எனும் பெயரிலான காணியில் சிதம்பரம் ரகுநாதன் என்பவரின் காணிக்காக மாற்று காணியை வழங்குவதற்காக 2021 யூலை மாதம் 08 ஆந் திகதிய ஆணைக்குழு தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது | சிதம்பரம் ரகுநாதன் அவர்களுக்கு மாற்றுக் காணியை வழங்குவது சம்பந்தமாக ஆணைக்குழுவிற்கு விளக்கமளிக்கும் போது மாத்தளை மாவட்ட பணிப்பாளரின் 2021-06-28 ஆந் திகதிய கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிக்கையும் ஆணைக்குழுவின் பணிப்பாளர்/ நில அளவை மற்றும் பிரித்து | மாற்று காணியை வழங்கும் போது நிர்ணயிக்கப்பட்டவாறு உறுதிப்படுத்திக் கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | டன் இக்காணி நக்கிள்ஸ் சரணாலயத்திற்குரியதாக இல்லையா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக லக்கல பிரதேச செயலகத்திடம் விசாரித்து 2021 யூலை மாதம் 19 ஆந் திகதி மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி கடிதம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கான பதில் எதுவும் மஹ/403 ஆம் இலக்க கோவையில் இருக்கவில்லை. அதற்கிணங்க சரியான விடயத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளாது மாற்றுக் காணியை ஒப்படைப்பதற்கு ஆணைக்குழு சச்சரவுத் தன்மையான தீர்மானத்தினை எடுத்துள்ளது என அவதானிக்கப்பட்டது. | வேறுபடுத்துதல் இனால் 2021-03-12 ஆந் திகதி உறுதிப்படுத்தலும் அனுப்பிவைக்கப்பட்டது. லக்கல பிரதேச செயலாளரிடமிருந்து 2022-04-26 ஆந் திகதி விசாரிக்கப்பட்டுள்ள விளக்கமளித்தல் சம்பந்தமான கடிதம் 2022-05-18 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் பிரேகுருப் தோட்டத்தின் ஒட்டுமொத்த நில அளவையினையும் சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. எனவே ஆணைக்குழுவிற்கு விளக்கமளிப்பதற்கு முன்னரைப் போல பின்பும் சரியான விடயத்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iv) | பிரேகுருப் எனும் பெயருள்ள காணி தொடர்பாக சிதம்பரம் ரகுநாதன் என்ற நபரினால் 7 சந்தர்ப்பங்களின் போதும் சிதம்பரம் ஜெகதீசன் என்ற நபரினால் 06 சந்தர்ப்பங்களின் போதும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது டன் அக்கடிதங்களின் கையொப்பங்களானது நியதிச்சட்ட தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் வைக்கப்பட்ட கையொப்பங்களுடன் வித்தியாசமாகக் காணப்பட்டது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் | சிதம்பரம் ரகுநாதன் என்ற நபர் 7 சந்தர்ப்பங்களின் போது மாற்றுக் காணிகளை வேண்டி இருந்ததுடன் அவற்றில் மூன்று சந்தர்ப்பங்களினதும் உரிய தொடக்க பிரதி மஹ/403 ஆம் இலக்க கோவையில் உள்ளது. சிதம்பரம் ஜெகதீசன் என்ற நபர் 6 சந்தர்ப்பங்களின் போது மாற்றுக் காணிகளுக்காக வேண்டுதல்களை சமர்ப்பித்திருந்ததுடன் அவற்றில் 2 சந்தர்ப்பங்கள் தொடர்பான மூலப் பிரதிகள் மஹ/419 ஆம் இலக்க கோவையில் உள்ளது. இந்த அறிவிப்பாளரின் நியதிச்சட்ட தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்பட்டு தற்பொழுது வரை 50 ஆண்டுகளை மிகைத்திருந்ததனால் வெளிப்படுத்தல் பத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள கையொப்பத்திற்கும் | கையொப்பங்களின் சரியான தன்மை ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யாமை சம்பந்தமாக பரீட்சிப்பினை மேற்கொண்டு பொய்யான ஆவணங்களை தயாரித்தல் இடம்பெற்றிருக்காமையிருந்தால் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இக்கடிதங்களின் மூலப் பிரதிகள் எதுவும் கோவைக்குள் இருக்கவில்லை. அக்கடிதங்களைப் பரீட்சித்த போது வைக்கப்பட்டுள்ள கடிதங்கள் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளது. (Scan) என அவதானிக்கப்பட்து. | நிகழ்காலத்தின் வேண்டுதல் கடிதங்களில் வைக்கப்படுள்ள கையொப்பத்திற்குமிடையே சில வித்தியாசங்கள் காணப்படுவது தொடர்பாக உரிய அறிவிப்பாளரின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | |
| (v) | அமைச்சரவையின் செயலாளரினால் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 2022 நவம்பர் 14 ஆந் திகதிய 22/ நானாவித (063) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் (i) ஆம் சிபாரிசுக்கு இணங்க அமைப/18/0828/738 /006 ஆம் இலக்க 2018 மே 30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற காணி வழங்கல்களை உடனடியாக அமுலுக்கும் வரும் வகையில் நிறுத்தப்பட வேண்டிய போதிலும் 2022 நவம்பர் 24 ஆந் திகதி சிதம்பரம் ரகுநாதன் என்ற நபரின் அட்டோனி அதிகார தகமையுள்ள எம்.டீ.சரத் என்பவருக்கு கொழும்பு மாவட்டத்தில் கடுவல பிரதேச செயலகப் பிரிவில் சந்திரிகா முகாரதுங்க மாவத்தையில் அமைந்துள்ள கனேமுல்ல வயல் காணி இல்லையாயின் கனேதொட தோட்ட காணியின் 11 ஏக்கர் மாற்றுக் காணியாக ஒப்படைக்கப்பட்டிருந்தது . | 2022-11-14 ஆந் திகதிய 22/நானாவிதம் (063) ஆம் இலக்க தீர்மானத்தில் அல்லது அமைப/18/0828/738/006 ஆம் இலக்க 2018-05-30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திலேனும் சட்ட கடப்பாட்டிற்காக காணியை விடுவித்தல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் மூலம் 5 ஏக்கர் வரையான காணி குத்தகை அடிப்படையில் வழங்குதல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானம் மற்றும் சிபாரிசுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | கொழும்பு மாவட்டத்தில் கடுவல பிரதேச செயலகப் பிரிவில் சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தையில் அமைந்துள்ள கனேமுல்ல வயல்காணி இல்லையாயின் கனேதொடவத்த காணியானது கே.டீ.என் அப்புஹாமி என்பருக்கு சொந்தமான 42 ஏக்கர் 58 பேச்சஸ் வயல் காணி 2011 நவம்பர் 28 ஆந் திகதி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவிற்கு இணங்க ஆணைக்குழுவிறகு கொ/1068 ஆம் இலக்க அறிவிப்பினால் வெளியிடப்பட்டிருந்த ஒரு காணியாக இருந்ததுடன் உரிய வயல் காணியை மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரேகுரூப் தோட்டம் என்ற பெயரிலான மேட்டு காணிகக்கு பரிமாற்றம் செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது. | கொழும்பு மாவட்டத்தில் கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் வெலிவிட கிராமத்தில் அமைந்துள்ள கனேமுல்ல வயல் காணி இல்லையாயின் கனேதொட காணி எனும் பெயரிலான காணி கனேமுல்ல வயல் காணி என்பதாக இனங்காணப்பட்டிருந்தும் அது செங்கல் உலை பேணப்பட்டு வருகின்ற மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட ஒரு காணி என ஆணைக்குழுவின் பணிப்பாளர்/ நிலஅளவை மற்றும் பிரித்து வேறாக்குதல் இனால் 2010-09-23 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நிர்யிக்கப்பட்டவாறு விளங்கிக் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vii) | கொழும்பு மாவட்டத்தில் கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் அமைந்துள்ள கனமுல்ல வயல் காணி இல்லையாயின் கனேதொடவத்த காணியின் 25 ஏக்கர்கள் ரூபா 24,500,000 தொகைக்கு திர்மானிக்கப்பட்டு பொதுக் கொள்கை தீர்மானத்திற்கு இணங்க 2022 ஆகஸ்ட் 19 ஆந் திகதியில் உள்ளவாறான பெறுமதி ரூபா 86,012,150 ஆக | ஆணைக்குழுவின் சட்ட கடப்பாட்டிற்காக மாற்று காணியை வழங்கும் போது 603 ஆவது ஆணைக்குழு கூட்டத்திற்காக 2009-12-22 ஆந் திகதி கூடிய ஆணைக்குழு வழங்கியுள்ள கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் பரிமாற்றத்தின் கீழ் காட்டுக்காணிப் பகுதிக்காக அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கிணங்க பிரேகுரூப் தோட்டத்தின் மற்றும் மாற்றீடாக வழங்கப்பட்ட கனேமுல்ல வயல் காணி | நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதிக்கு இணங்க காணி வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதிப் பணிப்பாளரினால் (மதிப்பீடு மற்றும் இழப்பீடு) பெறுமதியிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க 1996 ஆம் ஆண்டின் போது ரூபா 6,125,ஆகக் காணப்பட்ட ஒரு பேச்சர்ஸ் பெறுமதி 2022 ஆம் ஆண்டளவில் ரூபா 21,503 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அதன் நிகழ்கால பெறுமதி அதற்கு அதிகமானது என அவதானிக்கப்பட்டது. | இல்லையாயின் கனேதொட காணியின் மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை மேற்கூறிய பொதுக் கொள்கை திர்மானத்தின் அடிப்படையில் அறிவிப்பாளருக்காக மாற்று காணியை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (கா) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் ஹொரண வேவல, ஹெகல்வத்த, பங்களாவத்த காணி களுதத்துறை மாவட்டத்தில் ஹொரண பிரதேச செயலாளர் பிரிவில் மாஹேன வடக்கு 615 பீ கிராம உத்தியோகத்தர் பிரிவினைச் சேர்ந்த காணியில் பிரிக்கப்படாத 14 ஏக்கர் 1ரூட் 9.9 பேச்சஸ் காணியினுள் ஹொரண இஸிபதனாரா மாதிபதி சுவாமி அவர்களினால் முறையற்ற வகையில் 5 ஏக்கருக்கு அண்மித்த அளவானவையும் இன்னும் ஒரு தனிப்பட்ட காணிச் சொந்தக்காரர் அதிகாரமற்ற வகையில் 66 பேச்சஸிற்கு மிகையான அளவினையும் பயன்படுத்தி வருவதாக கோவைகளுக்கு இணங்க அவதானிக்கப்பட்டதுடன் 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரமின்றி பயன்படுத்திவருபவர்களை அப்புறப்படுத்துவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிஹிபெவிதி சமூகத்தலைவர்கள் பயிற்சி நிலையத்திற்காக இஸிபதனாரமாதிபதி வணக்கத்திற்குரிய கௌரவ தன்ஜம் தென்னே தம்மரங்சி அவர்களினால் குத்தகை அடிப்படையில் வேண்டுகோள் விடுத்து அதற்கிணங்க 1581 ஆம் இலக்க திட்டவரைபடத்தின் 4 ஏக்கர் 2 ரூட் 00 பேச்சஸ் தெளிவான காணி அளவினை ஆணைக்குழுவின் பெயரில் அளவீடு செய்வதற்கு 15/6/3626 ஆம் இலக்க 2021-11-08 ஆந் திகதிய நில அளவை கட்டளை வழங்கப்பட்டது. எனினும் சுஜாதா வீரக்கோன் என்ற நபர் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் CA(W) 576/2021 ஆம் இலக்க வழக்கினை ஆணைக்குழுவிற்கு எதிராக தொடுத்ததனால் நில அளவை செய்வதற்கு முடியாதிருந்ததனால் குத்தகை வழங்குவதற்கு மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை | அதிகாரமற்று பயன்படுத்துபவர்களை வெளியேற்றுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | காலி மாவட்டத்தில் கால்லிந்தகாவ தோட்ட காணியில் 4 ஏக்கர் 2 ரூட் 12. 60 பேச்சஸ் ளெவான காணியை ஒரு தனியார் | காலி மாவட்டத்தில் கல்லிந்த தோட்ட காணியில் 4 ஏக்கர் 2 ரூட் 12.6 பேச்சஸ் அளவானவை இன்டெக்ஸ் மோட் (தனி) கம்பனிக்கு 30 | நிலுவையான குத்தகைகள் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனி பயன்படுத்தி வருவதுடன் இக்காணிக்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து திருத்திய மதிப்பீட்டுப் பெறுமதிக்கு இணங்க 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய மொத்த குத்தகை வாடகை ரூபா 597,924 தொகை கணக்காய்வுத் திகதியான 2023 யூன் வரை அறவிடப்படபட்டிருக்கவில்லை. | ஆண்டுகளுக்கான குத்தகை அடிப்படையில் 625 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட்டு தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை செலுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு 2021-12-05 ஆந் திகதி கிடைத்துள்ளதுடன் அதற்கிணங்க 05 ஆண்டுகளுக்குரிய குத்தகைப் பணத்தின் வித்தியாசம் செம்மையாக்கப்பட்டுள்ள து. (252,000-164,700 = 87,300) அதற்கிணங்க நிலுவை குத்தகையை செலுத்துமாறு 2021-12-21 ஆந் திகதி குத்தகைதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டுடன் அதன்படி குத்தகைப் பணத்தில் ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளதுடன் நிலுவைப் பணத்தை செலுத்துமாறு 2023-03-10 ஆந் திகதி தெரியப்படுத்தப்பட்டது. மீண்டும் ஞாபகப்படுத்தல் கடிதம் 2023-07-06 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க கொடுப்பனவு செய்யப்படவில்லையாயின் சட்ட ரீதியான நடவடிக்கையினுாடாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |
| (கீ) | கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ வெல்லம்பிடிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஜாகொடுவவத்த காணியில் 01 ரூட் 9.79 பேச்சஸ் அளவானவை ஆணைக்குழு அதிகாரச் சடத்டத்தின் 22(1)(ஆ) பிரிவின் கீழ் வருடாந்த குத்தகை ரூபா 1,590,000 வீதம் ஒரு தனி நபருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்காணியின் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் அது ரூபா 26,500,000 இற்கு அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு | 2021-07-19 ஆந் திகதி குத்தகைதாரர் தெரியப்படுத்தியிருந்தும் மதிப்பீட்டுப் பெறுமதி மிகவும் உயர்ந்த பெறுமதியாக இருந்ததனாலும் இச்செயற்திட்டத்தினுாடாக உழைக்கும் வருமானத்தில் இக்குத்தகைப் பணத்தினை செலுத்துதல் எப்படியும் மேற்கொள்ள முடியாததனாலும் மீண்டும் குத்தகையை திருத்தம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுது. அதற்கிணங்க பணிபாளர்/ மதிப்பீடு மற்றும் | காணியை மதிப்பீடு செய்து குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தும் அந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட குத்தகை மிகவும் அதிக பெறுமதியாக இருந்ததனால் அதனை செலுத்த முடியாது என 2022 சனவரி 02 ஆந் திகதி குத்தகைதாரர் தெரிவித்திருந்தார். அதற்கிணங்க இக்காணியை மீண்டும் மதிப்பீடு செய்து குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கையை முடிவுறுத்துதலானது கணக்காய்வுத் திகதியான 2023 யூன் வரையும் இடம்பெற்றிருக்கவில்லை. | இழப்பீட்டினால் 2022-01-07 ஆந் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியிருந்தும் அதனை மாற்றம் செய்வதற்கு முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. குத்தகைதாரரினால் மீண்டும் மதிப்பீட்டினை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மீண்டும் அதனை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புமாறு மேன்முறையீடு இந்த ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக மீண்டும் 2023-07-04 ஆந் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் இறுதித் தீர்மானம் எடுத்து உங்களுக்கு தெரியப்படுத்துவேன். | |
| (கு) | ஆணைக்குழுவினால் குத்தகைக்கு வழங்கிய காணிகள் 5 ஆண்டுகளுக்கு 5 ஆண்டுகள் மதிப்பீடு செய்யப்பட்டு உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டியதுடன் அக்காணிகளின் மதிப்பீடும் அதங்கிணங்க அறவிடப்படுகின்ற குத்தகைப் பணத்தின் பெறுமதியும் மாற்றப்பட வேண்டுமென ஆணைக்குழு காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது விதிக்கப்படுகின்ற நிபந்தனையாகும். அதற்கிணங்க காணிகளின் மதிப்பீட்டு குத்தகை பெறுமதியைப் பெற்றுக்கொள்ளல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். எவ்வாறாயினும் திவுலபிடிய ஸ்பாட்சேட் லங்கா மற்றும் மீரிகம ப்லான்டேசன் ஆகிய நிறுவனங்களுக்காக குத்தகைக்கு வழங்கியுள்ள காணிகளின் திருத்திய மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில் | மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வது தாமதமடைந்தமை தொடர்பாக பணிப்பாளர் மதிப்பீடு மற்றும் இழப்பீடு 2022-09-20 ஆந் திகதி மீண்டும் ஞாபகப்படுத்தலினை அனுப்பிவைத்துள்ளார். | நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பீடு செய்து குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | லை. | | |
| (கூ) | கருங்கல் காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் புவிச்சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம் ஆகிய நிறுவனங்களின் சிபாரிசினைப் பெற்று ஒரு ஆண்டு காலத்திற்கு அமுல்ப்படுத்தும் வகையில் எழுத்துமூலம் குத்தகை உடன்படிக்கை செய்து கருங்கல் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட வேண்டுமேன 2017 பெப்ரவரி 07 ஆந் திகதிய 9676 ஆம் இலக்க ஆணைக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கருங்கல் வருமான பதிவேட்டிற்கு இணங்க ஆணைக்குழுவின் கருங்கல் காணிகள் 93 குத்தகைதாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது குத்தகை கோவைகளில் ஆணைக்குழுவிற்கும் உரிய குத்தகைதாரர்களுக்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கை இல்லாதிருந்தமை, மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் புவிச் சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கல் பணியகம் ஆகிய நிறுவனங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வருடாந்த சிபாரிசு பெற்றுக்கொள்ளப்படாமை, உரிய உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வணிக உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தமை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த நிலுவையான குத்தகை வருமானம் அறவிடப்படாதிருந்தமை ஆகிய குறைபாடுகள் | குத்தகைப் பேரேட்டினைத் தயாரித்து 93 குத்தகைதாரர்களுக்குரிய தகவல்கள் சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. முறையான குத்தகை உடன்படிக்கையினை வழங்கும் போது அது தொடர்பான நிபந்தனைகள் பற்றி தரப்பினர்களுக்கிடையே இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆணைக்குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்ட கியூப் அளவிற்குரிய பெறுமதி மற்றும் புவிச்சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட கியூப் அளவிற்குமுரிய பெறுமதி தொடர்பாக குத்தகைதாரர்கள் அதற்கு இணங்கியுள்ளமை தொடர்பான இறுதித் தீர்மானத்திற்கு வருவதற்கு தாமதித்துள்ளதனால் இன்னும் அது சம்பந்தமாக கலந்துரையாடுவதனூடாக உடன்படிக்கைகளை வழங்குவதற்கு தாமதித்ததனால் மேற்கூறிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு உட்பட்டு குத்தகை உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவதற்கு மூன்று வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் செயற்திட்டத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் புவிச்சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம் ஆகிய நிறுவனங்களின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய வருடாந்த சிபாரிசு பெற்றுக்கொள்ளப்படுவதானது தற்பொழுது அமுல்ப்படுத்தப்படுகின்ற வன் ஸ்டொப் சொப் (One Stop | நிலுவை குத்தகை வருமானம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டன. | Shop) முறைமையின் கீழானதுடன் அந்த சிபாரிசு படிவம் இலக்கம் 02 இன் கீழ் எங்களால் வழங்கப்படுகின்ற இணக்கப்பாட்டு கடிதத்தின் மூலம் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மேற்கூறிய சிபாரிசு எங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்படுவதில்லை. அதற்கிணங்க வர்த்தக அனுமதிப்பத்திரம் மேற்கூறிய முறைமையின் கீழ் புவிச்சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதனால் அதன் பிரதி எங்கள் நிறுவனத்திற்கு கிடைப்பதில்லை. 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தினை அறவீடு செய்வது சம்பந்தமாக முறையான நடைமுறை தயாரித்து சமர்ப்பிக்கப்படுவதுடன் ஆணைக்குழுவின் தீர்மானமாவது இது சம்பந்தமாக நிறுவன ரீதியான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடி மீண்டும் அச்சிபாரிசுடன் சமர்ப்பித்தல் ஆகும். அதற்கிணங்க மேற்கூறிய குழுவின் கலந்துரையாடலுக்கு கட்டுப்பட்டுள்ளதுடன் அத்தீர்மானத்தின் அடிப்படையில் நிலுவைக் குத்தகை அறவிடப்பட்டு வருவதுடன் அது தொடர்பாக அடுத்துவரும் ஆணைக்குழுக் கூட்டங்களில் தெரியப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (கெ) | மீளாய்வாண்டில் 6 கருங்கல் குத்தகை செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது அறவிட வேண்டிய குத்தகை | மஹிந்த ஜகத்குமாரவிடமிருந்து அறவிட வேண்டிய குத்தகைப் பணத்திற்கான நிலுவைக் குத்தகைப் பணத்தை | நிலுவைக் குத்தகை அறவிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 37,909,196 ஆக இருந்ததுடன் அக்குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நமடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்துமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய பணம் செலுத்தப்படவில்லையாயின் வருமானப் பிரிவின் மூலம் உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் சட்டம் மற்றும் பணிப்பாளர் செயற்திட்டத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. சமந்த குமார விஜேசிரி, டபிள்யு.எல்.சந்திராணி, தனபால வினியாராச்சி ஆகிய குத்தகைதாரர்களுக்கான காணிப்பகுதிகளுக்குரிய அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு முன்னர் உரிய நிலுவைப் பணத்தை அறவிட்டு அனுமதிப்பத்திரத்தினை வழங்குமாறும் அவ்வாறு செலுத்துவதற்கு முன்வரவில்லையாயின் அனுமதிப்பத்திரம் வழங்குவதனை நிறுத்திவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் வருமானப் பிரிவின் மூலம் பணிப்பாளர் செயற்திட்டத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பிரியங்க ஏக்கநாயக்கா அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக பணிப்பாளர் செயற்திட்டத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (கே) | களுத்துறை மாவட்டத்தில் தொடம்கொட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள தீகல்லவத்த கருங்கல் காணியில் 01 ஏக்கர் 3 ரூட் அளவான காணியின் மீது பொருத்தப்பட்டுள்ள கருங்கல் அரைக்கும் இயந்திரத்தின் குத்தகை வாடகை சம்பந்தமாக 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க ரூபா | கருங்கல் செயற்திட்டத்திற்காக ஒரு ஆண்டு காலத்திற்கும் கல் கிரேசரினை பொருத்துவதற்காக 30 ஆண்டுகள் காலத்திற்குமாக எஸ்.டபிள்யூ.பீ.பீ சுகததாஸா அவர்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2020 ஆம் | துணைப்பதிவேடுகளில் குத்தகைதாரர்களை உள்ளடக்குதல் மற்றும் நிலுவை குத்தகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 144,000 நிலுவை வாடகை அறவீடு செய்ய வேண்டியுள்ளது என கோவைகளுக்கு இணங்க உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் அந்த மீதி குத்தகைப் பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | ஆண்டு தொடர்பான மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகைப் பணத்தை செலுத்துமாறு 2022-12-31 ஆந் திகதி குத்தகைதாரர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 2022-12-31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய குத்தகைப் பணம் ரூபா 144,000 ஆகும். இன்றுவரை உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படாததனால் இந்த ஒப்படைப்பினை இரத்துச் செய்யுமாறு பணிப்பாளர் செயற்திட்டத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. | |
| (கொ) | எந்த சட்டரீதியான ஏற்பாடும் இல்லாதிருந்தும் தலைவர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளருக்கு மிளாய்வாண்டின் போது ரூபா 1,176,000 தொகை வீட்டு படியாகவும் உபசரிப்பு படியாகவும் செலுத்தப்பட்டது. | ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு வீட்டு மற்றும் உபசரிப்பு படியினை செலுத்துவது சம்பந்தமாக அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திடம் விசாரித்து மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது அந்த உத்தியோகத்தர்களுக்கு உபசரிப்பு மற்றும் வீட்டுப் படியினை செலுத்துவது சம்பந்தமாக இணங்கிக் கொள்ள முடியாது என தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பாக 2023-02-02 ஆந் திகதி நடைபெற்ற 784 ஆவது ஆணைக்குழு கூட்டத்திற்கு சமர்ப்பித்ததன் பின்னர் மேற்கூறிய படிகளைச் செலுத்துவது நிறுத்தப்பட்டது. | செலுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத படிகளை மீள அறவீடு செய்தல் வேண்டும். |

### 3.3 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்கள் 05 ஆக இருந்ததுடன் அவற்றில் 03 வாகனங்கள் ஓடும் நிலையில் இல்லை என ஆணைக்குழு கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தும் இரண்டு வாகனங்கள் 2022 ஆம் ஆண்டில் 02 மாதங்கள் | PC -6653 ஆம் இலக்க கெப் வாகனம் 2021 ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதியின் போது அதன் இன்ஜினில் ஏற்பட்ட கோளாறானது தொலைபேசி பெயர் பட்டியலுக்கு இணங்க அந்த பிரதேசத்தில் | தாமதமின்றி வாகனங்கள் பழுதுபார்க்கப்படுதல் வேண்டும். |

ஓடி அவற்றில் ஒரு வாகனம் பழுதுபார்ப்பதற்கு அனுப்பிவைத்து 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அந்த பழுதுபார்ப்பினை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

அமைந்துள்ள ஒரு கராஜிடம் ரூபா 485,380 தொகை செலவு செய்து பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் உத்தரவாத காலத்தினுள்ளே மீண்டும் இன்ஜினில் கோளாறு ஏற்பட்டிருந்ததனால் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்ட கராஜின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மற்றுமொரு கராஜிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அதன் பழுதுபார்ப்பினை நிறைவேற்றுவது சம்பந்தமாக கராஜின் இணக்கப்பாடு வெளிப்படுத்தப்படவில்லை. எனவே வாகன பழுதுபார்ப்பினை மேற்கொள்ளுமாறும் இல்லையாயின் அந்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்து கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. 251-7256 ஆம் இலக்க வாகனத்தின் தொழில்நுட்ப கோளாறினை திருத்தம் செய்வதற்காக 2022 ஆம் ஆண்டின் போது அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அந்த ஆண்டில் நாட்டில் காணப்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நாட்டில் காணப்பட்ட பிரச்சினையான நிலைமை, செலவுகளை மட்டுப்படுத்தும் நிலைமை என்பவற்றின் அடிப்படையில் அந்த வாகனத்தை பழுதுபார்த்தல் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமையால் அந்த வாகனத்தை பழுதுபார்த்தல் தாமதமடைந்தது. எவ்வாறாயினும் 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்கு இணங்க

| | | | |
|---|---|---|---|
| | | அந்த வாகனத்தை பழுதுபார்க்கும் நடவடிக்கை தற்பொழுது முடிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிடம் 15 வாகனங்கள் காணப்பட்டிருந்தும் 25 சாரதிகள் உள்ளார்கள் என வாகனங்கள் சம்பந்தமான பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் சாரதிகள் குழாமில் 25 சாரதிகள் இருந்தும் ஆணைக் குழுவில் 15 வாகனங்கள் மாத்திரம் காணப்பட்டது. அந்த குழாம் வாகனங்களுக்கு மத்தியில் சில வாகனங்கள் ஓடும் நிலையில் காணப்படாத வாகனங்களின் எண்ணிக்கையை மிகைத்த எண்ணிக்கையான சாரதிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். எவ்வாறாயினும் அவர்களுக்கு மாதாந்த சம்பளம் கொடுக்கப்படுவதனால் ஒரு வாகனத்திற்கு ஒரு சாரதிக்கு மேல் ஈடுபடுத்தப்பட்டு கடமைகள் நிறைவேற்றப்பட்டது. மேலும் மிகைகச் சாரதிகளுக்கு மத்தியில் இரண்டு நபர்கள் காணி அமைச்சிற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவ்வாறே ஓட முடியாதுள்ள வாகனத்திற்கு முறையான பெறுகை நடைமுறைக்கு இணங்க பழுதுபார்த்தல் தற்பொழுது இடம்பெற்று வருவதனால் அந்த நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் இந்த நிலைமை குறைக்கப்படும். | மிகையான சாரதிகளை பொருத்தமான வினைத்திறனாக சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 02 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது ஊழியர் தேவைப்பாட்டிற்கு இணங்க பதவிகளை திருத்தம் செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022-04-26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்தும் சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் பிற்போடுதல் இடம்பெற்றுள்ளதனால் மற்றும் 2022-08-22 ஆந் திகதி வழங்கப்பட்ட 04/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து ஆட்சேர்ப்புக்களும் உடனடியாக அமுலுக்குவரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது அத்தியவசியமான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசாங்க தொழில்முயற்சிகள் அல்லது தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து விசேட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்யுள்ளது. அதற்கிணங்க பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் நிருவாகம் ஆகிய ஆட்சேர்ப்புக்காக 2023-01-16 ஆந் திகதிய அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் தற்பொழுது பணிப்பாளர் நாயகம் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு பகிரங்க அறிவித்தல் வெளியிடப்பட்டு 2023-07-11 ஆந் திகதி நேர்முகப் | தேவைப்பாட்டிற்கு இணங்க அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பரீட்சை நடாத்தப்பட்டது. | |
| (ஆ) | மத்திய மட்டத்திலுள்ள 03 உத்தியோகத்தர்களையும் 126 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களையும் ஆரம்ப மட்டத்திலுள்ள 18 உத்தியோகத்தர்களையும் சேர்த்து மொத்தமாக 147 உத்தியோகத்தர்கள் அங்கீகரித்த பதவியணிக்கு முரணாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தும் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | 2022-10-21 ஆந் திகதி பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் பின்னர் 2022-11-03 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் மிகையான பதவியணியினர்கலை அங்கீகரித்த பதவியணியக்குள் உள்ளடக்குவது சம்பந்தமாக மீண்டும் கலந்துரையாடலின் நடாத்தப்பட்டதுடன் அக்கலந்துரையாடலில் தீர்மானத்திற்கு இணங்க அந்த சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவியணினர்களை இணைத்துக் கொள்வதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.<br>அதற்கிணங்க CP 23/0293/615/008 ஆம் இலக்க 2023-02-06 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அமைப/23/0293/615/008 ஆம் இலக்க 2023-04-04 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | மிகைப் பதவியணினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | 2018 யூன் 27 ஆந் திகதிய அமைப/18/1126/829/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஒரு ஆண்டு காலத்திற்காக 214 உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொண்டு செயலாற்றலுக்கு இணங்க 3 ஆண்டுகள் காலத்திற்காக அந்த உத்தியோகத்தர்களின் சேவையை நீடிக்க முடியும் என அதில் காட்டப்பட்டிருந்தும் உரிய காலம் முடிவடைந்ததன் பின்னரும் முகாமைத்துவ | 2021-10-21 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் பின்னர் 2022-11-03 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் மிகைப் பதவியணியினர்களை அங்கீகரித்த பதவியணிக்குள் உள்ளடக்குவது சம்பந்தமாக மீண்டும் கலந்துரையாடல் | உரிய பதவியணியினர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமலும் 138 முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் 10 சாரதிகள், 16 அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | நடாத்தப்பட்டதுடன் அக்கலந்துரையாடலின் தீர்மானத்திற்கு இணங்க அந்த சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவியணினர்களை இணைத்துக் கொள்வதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கிணங்க CP 23/0293/615/008 ஆம் இலக்க 2023-02-06 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அமைப/23/0293/615/008 ஆம் இலக்க 2023-04-04 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டது. |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PED/01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் தொடர்பான சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான கையோட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையானது மூன்று மொழிகளிலும் நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 இலிருந்து 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையும் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைப்பது சம்பந்தமாக 2023-05-03 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபன வரைவு மற்றும் மூன்று பொழிகளிலும் தயாரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் 05 பிரதிகளும் 02 CD நாடாக்களும் 2023-05-16 ஆந் திகதி காணி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதேபோல 2023-06-23 ஆந் திகதி காணிமறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு 2015, 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் | அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆண்டறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க காணி அமைச்சின் மூலம் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க மீண்டும் தயாரிக்கப்பட்ட 2015, 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக 2023-06-26 ஆந் திகதி சுற்றுலா மற்றும் காணி அமைச்சுசிற்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. | |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்ட அரசாங்க தொழில்முயற்சிகளின் நல்லாட்சிக்கான கையேட்டின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | நிறுவனத்தை மீள்கட்டமைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்கிய வகையில் 2023-2027 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் வரைபு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் வழிகாட்டலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த கூட்டிணைந்த திட்டத்தின் வரைபின் ஒரு பிரதி மூன்று வாரங்களுக்குள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தந்திரோபாய திட்டத்தினை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தயாரித்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**4.3 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் தகமை பெற்றறவர்களுக்கு 20இ000 ரன்பிய உறுதிகளை பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டு பகிர்ந்தளித்த உறுதிகளின் அளவு 2,422 ஆகும். அது திட்டமிடப்பட்ட அளவில் 12 சதவீதமான குறைந்த பெறுமதியாகும். | 2022 ஆம் ஆண்டில் பகிர்ந்தளித்த உறுதிகளின் எண்கிகை 2,422 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட உறுதிகளையும் உள்ளடக்கி தற்பொழுது வேலை முடிவுறுத்தப்பட்டு பகிர்ந்தளிப்பதற்காக ஆணைக்குழுவிடம் காணப்படுகின்ற உறுதிகளின் எண்ணிக்கை 2,450 ஆகும். அவ்வாறே 2022 ஆம் ஆண்டின் போது உறுதிகளை வழங்குவதற்கு உட்பட்டு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 448 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் தயாரித்த காலி மாவட்டத்திற்குரிய 183 அனுமதிப் பத்தீரங்களை 2023 ஆம் ஆண்டிற்குள் பகிர்நாதளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருடாந்த திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பௌத்த சமய ஸ்தானங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் சாஸனாகிவந்தனா நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக ஆண்டிற்குள் திட்டமிடப்பட்ட 290 களில் நிறைவேற்றப்பட்டது 23 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி 8 சதவீதமாக இருந்தது. | 290 சமய ஸ்தானங்களுக்கு 2022 ஆம் ஆண்டின் போது உறுதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் உறுதிகளை வழங்கும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற அடிப்படை வரைகளாவது உரிய சமய ஸ்தானம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்பதாகும். இதன் போது பதிவுசெய்யப்பட்டிருந்த 23 நிறுவனங்கள் மாத்திரம் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பணத்தினை செலுத்தி உறுதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வந்திருந்ததன் அடிப்படையில் | வருடாந்த திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | |
| (இ) | ஆண்டிற்குள் உறுதிச் சிக்கலினைத் தீர்த்துவைக்கும் 44 நடமாடும் சேவைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டது 2 எண்ணிக்கையானது என்பதனால் அதன் செயல்முன்னேற்றம் 5 சதவீதம் மாத்திரமாக குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | 44 நடமாடும் சேவைகளை நடாத்தும் திட்டமிட்ட இலக்கினை ஆண்டிற்குள் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்த போதிலும் செயலாற்றலின் கீழ் நடாத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை 02 ஆகக் குறிப்பபிடப்பட்டிருந்தமை சரியானது அல்ல என அறிவிக்கிறேன். | வருடாந்த திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | குத்தகை வருமானத்தை அதிகரிப்பதற்காக குத்தகை உடன்படிக்கைகளை திருத்தம் செய்து உடன்படிக்கைகளை வழங்குதல் மற்றும் கொள்கைகளுக்கும் சட்டவிதிகளுக்கும் இணங்க பொருத்தமான நபருக்கும் நிறுவனங்களுக்கும் குத்தகை அடிப்படையில் ஒப்படைப்பதற்கு ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்டுள்ள குத்தகைதாரர்களுக்கு நீண்டகால குத்தகை உடன்படிக்கை வழங்கப்படுகிறது. நீண்டகாலமாக பயன்படுத்தி குத்தகைப் பணமும் செலுத்திய குத்தகைதாரர்களுக்கு உரிய செயற்திட்ட குழுவின் அங்கீகாரம், ஆணைக்குழுவின் அங்கீகாரம், கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம், அமைச்சரவை அங்கீகாரம் என்பன இல்லாதது கோவைகள் காணப்படுகின்றமையும் தொடக்க 05 ஆண்டுகளுக்குரிய குத்தகைப் பணம் செலுத்தப்பட்டுள்ள போதிலும் குத்தகைதாரர்கள் குத்தகை உடன்படிக்கை கிடைக்காமையின் அடிப்படையில் நிகழ்கால குத்தகையை செலுத்தாதிருக்கும் குத்தகைதாரர்கள் இருத்தல் போன்ற விடயங்களின் காரணமாக குத்தகை | குத்தகை உடன்படிக்கையினை நிர்ணயிக்கப்பட்டவாறு வழங்கி குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உடன்படிக்கையை வழங்குவதற்கு முடியாதுள்ளது. 2023-07-13 ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்டத்தின் போது உள்ளக சட்டத்தரணிகளுக்கு மேலதிகமாக வெளிச் சட்டத்தரணிகளும் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். | |
| (உ) | செயலாற்றல் திட்டத்திற்குள் நியதிச்சட்ட ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட அளவாக காலாண்டிற்கு 1 வீதம் ஆண்டிற்கு 4 காட்டப்பட்டு அவற்றில் 3 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. ஆண்டிற்கு நிறைவேற்றக்கூடிய நியதிச்சட்ட ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட அளவு 4 என்பது தொடர்பாக கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிரந்தது. | நில அளவை செய்வதற்காக எல்லைகளைக் காட்டுதலும், திட்ட வரைபடங்களைத் தயாரித்தலும் இந்த ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் இடம்பெறுவது என்பதனால் செயலாற்றல் இலக்கினை நிறைவேற்றிக்கொள்ள முடியாது என தெரிவிக்கிறேன்.<br><br>எவ்வாறாயினும் நியதிச்சட்ட நிர்ணயம் வழங்கி முடிவுறுத்தப்பட வேண்டிய நபர்களின் எண்ணிக்கை 260 ஆக இனங்காணப்பட்டிருந்ததுடன் அவற்றில் 05 கோவைகளின் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மேற்கூறிய விடயங்களை திர்த்துவைக்கும் முறைமைக்கு இணங்க இந்த நடவடிக்கையையும் முடிவுறுத்த வேண்டியுள்ளது. | ஒரு ஆண்டிற்குள் நிறைவேற்றக்கூடிய நியதிச்சட்ட நிர்ணயிப்புக்களின் அளவு சரியாகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். |

**4.4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் | சிபாரிசுகள் |
|---|---|---|---|

| | **கருத்துரைகள்** | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' மற்றும் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய எனபீ/எஸ்பீ/எஸ்டீஜி/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு செயலாளரினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் வகையில் நிறுவனத்தினால் அடைந்துகொள்ள வேண்டிய இலக்குகளும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பொருத்தமான குறிகாட்டிகள் இனங்காணப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அவ்வாறான குறிகாட்டிகளை இனங்கண்டு குறிக்கோள்களை அடைந்து கொண்ட அளவு மற்றும் மீறல்களைப் போல கவனம் செலுத்தப்பட வேண்டிய நானாவித துறைகளும் இணங்காணப்பட்டிருக்கவில்லை. | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்துடன் தொடர்புகொண்டு 2023-2027 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டத்தின் வரைபு முடிவுறுத்தப்பட்டுள்ளது அதன் போது நிலைபேறான இலக்குகளை பெருமளவில் தொடர்புபடுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 2022 எரிபொருள் தட்டுப்பாடு பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையின்மை என்பவற்றினை முன்னிட்டு மேற்கூறிய இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்ததனால் அது 2022 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டு ஆணைக்குழு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் செயற்பாட்டு திட்டத்தினை தயாரிக்கும் போது அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையிலும் மிகவும் குறைந்த மட்டத்தில் செயலாற்றல் காணப்படும் பிரிவுகள் தொடர்பாக கவனம் செலுத்தியும் உரிய திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | நிலைபேறான அபிவிருதம்தி இலக்குகளை இனங்கண்டு அமுல்ப்படுத்துதல் வேண்டும். |